The
Good Pastor

நல்ல ஆயன்

“நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே
ஆட்டுக்கிடை உண்டாகும்” (அரு. 10 : 11–16).

புத்தகம் 18. | அக்டோபர் 1920. | இலக்கம் 10.

WITCHCRAFT.
பில்லிசூனியம்.

பில்லிசூனியம் என்றால் என்ன? தன் துஷ்ட செய்கையால் நமக்கு அநேக கெடுதிகளை விளைவிக்கவும், நம்மைத் துன்பத்துக்குள் ஆழ்த்தவும், விசுவாசத்தைக் கெடுக்கவும் பசாசை மனிதர் தங்கள் வந்தனை வழிபாடு முதலியவற்றால் வசியப்படுத்தி, அதை ஏவும் தொழிலே சூனியமாம். பல தருணங்களில் பசாசு மனிதர்மேல் ஆவேசமேறிப் பல தின்மைகளையும் கஷ்டநஷ்டங்களையும் உண்டாக்கினதென்று வேதாகமங்களின்மூலமாய் அறிந்திருக்கிறோம். “பசாசு மனிதர்மேல் அதிகாரம் வகித்து தன் சுய இச்சையால் அவர்களை உபாதித்துவருகிறதில்லை” என்பதற்குப் புண்ணியவாளனான ஜோப் என்பவருடைய சரித்திரமே அத்தாட்சி. சர்வேசுரனுடைய உத்தாவின்மேல் நரகப் பசாசு நல்லோரையும் தீயோரையுந் துன்பப்படுத்திவருகிறது. தீயோருடைய பாவத்துக்குத் தண்டனையாகவும், நல்லோருடைய புண்ணியங்கள் பரீட்சிக்கப்பட்டு, அதனால் அவர்களுடைய நித்திய சம்பாவனை அதிகரிக்கும்பொருட்டும் சர்வேசுரன் சிற்சில சமயங்களில் மனிதரைத் துன்பப்படுத்தும்படி பசாசுக்கு உத்தரவு அளிக்கிறாரென்று அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரங்களால் தெளிவாய் விளங்குகிறது.

நல்லோருக்குந் தீயோருக்கும் பசாசால் உண்டாகும் தின்மைகளைப் பில்லிசூனியக்காரரால் நிவர்த்தித்துக்கொள்வது சரிதான் என்று புத்தியும் விஸ்வாசமுங் கெட்ட சில கிறீஸ்துவர்கள் கூறுவார்கள். நமது கர்த்தரோவெனில், நரக சாத்தானை ஜெபத்தாலும் ஒருசந்தியாலும் வென்று ஒழிக்கவேண்டுமென்றுபடிப்பித்திருக்கிறார். அப்போஸ்தலரான அர்ச். இராயப்பரும் நமதாண்டவருடைய படிப்பினைப்பிரகாரம் மந்திரக்காரனான சிமோனையும் அவன் எஜமானனாகிய பசாசையும் வென்றொழித்தார். இவ்வாறே செய்துவருகிறார்கள் அர்ச்சியசிஷ்டவர்களும்.

பசாசை ஓட்ட யாருக்கு அதிகாரமுண்டென்றால, அப்போஸ்தலர்களுடைய பதிலாளிகளான மேற்றிராணிமாருக்கும், அவர்களுடைய அநுமதிபெற்ற குருமார்களுக்குமே உண்டு. வேறு யாராகிலும் இப்போப்பட்ட அதிகாரத்தை வகிப்பது பெரும்பாவமாகும்.

மேலும் பசாசு மனிதர்மேல் ஆவேசமேறுவது அவர்களுக்குப் பொல்லாங்கு

வருத்துவதற்கும், அவர்களுடைய ஆத்துமங்களை நரகபாதாளத்திற்கு இழுத்துச் செல்லவுமேயாம். பசாசு விசேஷமாய் இந்துக்களைப் பிடித்துக்கொள்வது சகஜம். ஞானஸ்நானத்தால் முத்திரையிடப்பட்ட கிறீஸ்துவர்களைமுதலாய் அசுத்த அரூபி கைப்பற்றுவதுண்டு. இதுவோ அபூர்வமான விஷயமென்று அறியக்கடவோம். சிலர் கர்வத்தால் தலைவிரித்து ஆடுவார்கள். அநேக கிறீஸ்துவர்கள், தங்களுக்காவது தங்கள் வீட்டாருக்காவது அற்பசொற்ப வியாதி உண்டாகும்போது அது காற்றின் தோஷமென்று பிதற்றி, அக்கியானிகளையுந் துருக்கர்களையும் அண்டி, அவர்களால் மந்திரித்துக் கொள்வார்கள். அன்னோரிடமிருந்து விபூதி, சிட்டு, தாயித்து முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு, அதைப் பூச்சியமாய்த் தரித்துக்கொள்ளுவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு விஸ்வாசம் கிஞ்சித்தென்கிலும் இல்லையென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

பணக்காரரான இன்னும் பலர் தங்களுக்கு யாதொரு வியாதி உண்டானவுடனே இன்னான் வைத்த பில்லிசூனியத்தால் இந்த வியாதி உண்டானதென்று எண்ணி, குறத்தி, பறைச்சி அல்லது சக்கிலிச்சியைத் தூர ஊர்களினின்றும் வரவழைத்து, அவர்கள் கேட்கும் கோழி, ஆட்டுக்கடா, சாராயம் முதலிய செலவுகட்கு ஏராளமாய்ப் பொருளுதவி, வெட்கத்துக்குரிய சடங்குகளுக்குத் தங்களை கையளிப்பார்கள். கோவிலுக்கும் ஏழைகளுக்குந் தர்மங்கொடுத்தறியாத பரமலோபிகள், பில்லிசூனியத்தால் பசாசை அதட்டி ஓட்டி வியாதியை ஒரு நிமிஷத்தில் தொலைத்துவிடுவோமென்று பகட்டி, வயிறுவளர்க்கும் பாதகர் பேச்சை நம்பி, நூற்றுக்கணக்காய்த் தங்கள் பணத்தை விரயஞ்செய்து மோசம்போவதைக்கண்டு பரிதாபப்படுகிறோம். இவர்கள் கிறீஸ்துவர்களல்ல, பசாசின் பிள்ளைகளென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். மெய்யாகவே பசாசின் வேலையால் நமக்குப் பொல்லாப்பு உண்டாகும்போது நமது திவ்ய கர்த்தருடைய படிப்பினைப்பிரகாரம் ஜெபதபத்தாலும் ஒருசந்தி உபவாசத்தாலும் அவைகளை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டுமேயொழிய நரகப் பேயின் சடங்காசாரங்களை நிறைவேற்றி, அதற்கு அடிமையாகி, அதனுடன் நரகநெருப்பில் புதைபடுவது எப்பேர்ப்பட்ட மதிகேடு! நிர்ப்பாக்கியம்!

மெய்யாகவே பசாசால் பொல்லாங்குகள் உண்டாகும்போது நாமெப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று பின்வரும் சம்பவத்தால் நாம் அறிந்துகொள்வோமாக.

ஒரு கிறீஸ்துவக் குடும்பத்தில் பசாசால் உண்டான பெரும் பொல்லாப்பு அர்ச். சூசையப்பருடைய விசேஷ வேண்டுதலால் முற்றிலும் ஒழிந்துபோன அதிசயத்துக்குரிய வரலாறு.

தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த நீடாமங்கலத்தில் தாசில்தாரான ஸ்ரீமான் தங்கப்பிரகாசம்பிள்ளை தமது குடும்பத்துடன் வசித்துவந்தார். இவர் இவ்வருஷம் மார்ச்சு மாத ஆரம்பத்தில்பசாசாலுண்டான அநேககஷ்டநஷ்டங்களையும், அதனால் வந்த துன்பதுரிதங்களையும் அனுபவித்துவந்தார். அஃதெவ்வாறெனில், வீட்டிலுள்ள வஸ்திர முதலிய சாமான்கள் சடுதியில் தீப்பற்றி எரிந்தன. வீட்டிலுள்ள கட்டுமுட்டுகளும் சமையல் பாண்டங்களும் அங்குமிங்கும் தூக்கி எறியப்பட்டன. அடுப்பிலுள்ள நெருப்பு வீடெங்கும் பரம்பி எரியும். சுவரில் மாட்டப்பட்ட படங்களும் நெருப்புபற்றி எரியும். வீட்டிலுள்ள கற்கள், மாக்கட்டைகள், புஸ்தகங்கள் முதலியவை மேலே கிளம்பித் தாழே விழும். இதைக் கண்ட தாசில்தாரும், அவர் மனைவியும், பிள்ளைகளும் பயந்து, தேவஉதவியை மன்றாடிக் கதவுகளிலும், சுவர்களிலும் சிலுவை யடையாளத்தை வரைந்து, ஜெபிக்கத்தொடங்கினர். ஆயினும் சிலுவை அடையாளம் மறைந்து அதற்குப்பதிலாக இந்துமத அடையாளங்கள் காணப்பட்டன. அவர்கள் சுவரில் மாட்டிவைத்த வேதப்படங்களைப் பசாசு மதிக்கவில்லை. அருகாமையிலிருந்த குருவானவர் அங்குவந்து வீட்டை மந்திரித்தார். சற்றுநேரம் அமைதியாயிருந்தபோதிலும், உடனே பசாசின் கோஷ்டத்தால், முன்னிலும் அதிக தொந்தரைகள் உண்டாயின. ஆறும் நாள் குடும்பத்தார் பகற்போசனத்திற்கு உட்காரவே, போசனம் வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள் மேலே எழும்பி, பிறகு கீழேவிழுந்து உடைந்தன. தாசில்தார் இப்பேர்ப்பட்ட சங்கடத்தாலும், தொந்தரை

யாலும், மனஞ்சோர்ந்து தூரத்திலுள்ள வேறு வீட்டுக்குக் குடிபோயினார். அவ்விடத்திலும் முன் நிகழ்ந்த சங்கடங்கள் நடந்தேறிவந்தன. மேலும் அவ்வீட்டின் புறக்கடையில் இவ்வாறு வரையப்பட்டிருந்தது. "என்னுடைய நாமதேயம் இராஜமாடன்; இந்த வீட்டை விடமாட்டேன். இவ்வீட்டிலிருப்பவர்கள் எங்கே போனாலும் அவர்களைப் பின்தொடர்வேன். நான் இவ்விடம் அனுப்பப்பட்டிருக்கிறேன். இதைவிட்டு ஒருபோதும் போகமாட்டேன். இந்த ஜனங்கள் இந்து மதத்தைக் கைக்கொள்ளாவிட்டால் இவர்களைச் சும்மாவிடமாட்டேன்" என்று எழுதப்பட்ட வாக்கியங்களைத் தாசில்தாரும், அவர் குடும்பத்தாரும், வாசித்தபின், மனச்சஞ்சலங்கொண்டார்கள். இதையெல்லாங்கண்ட தாசில்தாருடைய சிநேகிதர் அவரைப்பார்த்து, மந்திரவாதிகளுடைய ஏவலால் இப்பொல்லாப்பு உண்டாயிருப்பதின் நிமித்தம், பில்லிசூனியங்களைப் பிரயோகித்தால் இவையெல்லாம் நீங்கிப்போமென்று சொன்ன புத்தியைத் தாசில்தார் காதில் போட்டுக்கொண்டாரில்லை. அந்நாட்களில் தஞ்சைக்குச் சென்றிருந்த மயிலை மேற்றிராணியாரிடம் ஸ்ரீமான் தங்கப்பிரகாசம் பிள்ளை சென்று தனக்குண்டாயிருந்த சங்கடங்களை அவருக்கு அறிக்கை செய்தார். மேற்றிராணியாரும் அக்குடும்பத்தின்மீது இரக்கங்கொண்டு, தைரியம் வருத்துவித்து, ஒரு குருவானவரை நீடாமங்கலத்துக்கு அனுப்பிவைத்தார். அவ்வூருக்குவந்த குருவானவர் ஸ்ரீ தங்கப்பிரகாசம் பிள்ளைக்கும், அவர் குடும்பத்தாருக்கும், தைரியம் வரக்கூடுமானவைகளைச் சொல்லி ஆறுதல் வருத்தினபின், தம்முடன் வந்த இரு கனவான்களுடன் அங்கு உட்கார்ந்தார். பசாசும் தன் துஷ்டவேலையைத் தொடங்கினது. இரும்புப்பெட்டியிலிருந்த ஒரு சிறு புத்தகம் புறப்பட்டு வெளியே வந்தது. இரண்டு திடைப்பங்கள் தாமாக நெருப்புப்பற்றி எரிந்தன. வீட்டிலுள்ள சாமான்கள் மேலே எழும்பிக் கீழேவிழுந்தன. இக்காட்சியைக்கண்ட குருவானவர், அங்கிருந்தவர்களை நோக்கி: "இம்மாதம் 19உ அர்ச். சூசையப்பருடைய திருநாள். அவருக்கு ஸ்தோத்திரமாக நவநாள் பிரார்த்தனை ஆரம்பிப்போம். திருநாள் முடிவில் பசாசின் கோஷ்டங்கள் முடிவாகு"மென்று கூறினார். இவ்வார்த்தைகளைச் செவிசாற்றிய அவ்வீட்டினர் அனைவரும் ஆறுதல்கொண்டு, மகா பக்தி, விஸ்வாசத்துடன் நவநாள் பிரார்த்தனை துவக்கினார்கள். ஜெபிக்கும் வேளையில் யாதொரு தொந்தரையும் நடக்கவில்லை. 18-ம் தேதி ஷை குருவானவர் அவ்விடஞ்சேர்ந்து, மேற்றிராணி ஆண்டவருடைய விசேஷ உத்தரவின்மேல் அந்த வீட்டில் திவ்யபூசைப்பலியை நிறைவேற்றினார். அர்ச். சூசையப்பருடைய திருநாளாகிய 19-ம் தேதி, குடும்பத்தார் காலை ஜெபங்களைத் தொடங்கி முடிக்கவே, முன் நடவாத பயங்கரத்துக்குக்குரிய சம்பவங்களைக் கண்ணுற்றுத் துக்கித்தபோதிலும் மனஞ்சோராமல், முழங்காலிலிருந்து மகா பக்தி விஸ்வாச நம்பிக்கையுடன் பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரைப் பார்த்து ஜெபித்தார்கள். உடனே வீட்டின் பின்புறத்தில் பலமாய் தட்டுகிற சத்தத்தைக்கேட்டு, அவ்விடம்போய் பார்த்தபோது கதவின் பலகையில் இவ்வாறு எழுதப்பட்டிருந்ததைக் கண்டார்கள். "இன்று இவ்வீட்டைவிட்டுப் புறப்படுகிறேன். இனி ஒருபோதும் இங்கு வரமாட்டேன். என்னை அனுப்பினவனைத் தண்டிக்கப்போகிறேன்" என்ற வாக்கியங்களே. அந்த நாள்முதற்கொண்டு அந்த வீட்டுக்கு முன் கூறப்பட்டவைகள் சம்பவிக்கவில்லை. இவ்வாச்சரிய சம்பவத்தைப்பற்றிக் கேள்வியுற்ற நீடாமங்கல வாசிகளுக்கும், மற்ற இந்து ஜனங்களுக்கும் சத்திய வேதத்தின் மகிமையும், ஜெபத்தின் வல்லமையும், சர்வேஸ்வரனுடைய மேலான அதிகாரமும் தெளிவாய் விளங்கவே அதிசயங்கொண்டு இதைப் பன்னிப்பன்னித் தங்களுக்குள் பேசிக்கொண்டதன்றியே இதைப்பற்றி யாவரோடும் வியந்து உரையாடி தங்கள் பத்திரிகைகளிலும் இவ்வதிசய வர்த்தமானத்தைப் பிரசுரம் செய்திருக்கிறார்கள். இதை வாசிக்கும் நண்பர்களே, நாம் பசாசால் துன்பப்படும்போது அந்தத் தீநரகக் கூளியின் கொடுஞ் செயலையும், அதன் கர்வத்தையும் வெல்லும் ஆயுதம் இன்னதென்று இச்சரித்திரத்தால் அறியக்கடவீர்களாக.

பத்தியுள்ளவர்களை உனக்காக வேண்டிக்கொள்ளச் சொல்லுவதுமன்றி நீ அர்ச்சியசிஷ்டவர்களையும் விசேஷமாய் தேவமாதாவையும் வேண்டிக்கொள்ளுவாயாக.

—(அர்ச். கிரேகோரியார்.)

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XVII
ஞான வீடு.

“ஓ! இஸ்ராயேலே! கடவுளுடைய வாசஸ்தலம் எவ்வளவு பெரிதானது” (பாரூக். III. 24).

“ஞானமானது தனக்கு ஓர் வீட்டைக் கட்டி எழு தூண்களையும் அறுத்து நிறுத்தினது” எனப் பழமொழியாகமத்தில் வரையப்பட்டிருக்கின்றது. இங்கு குறிப்பிட்டுள்ள ஞானம் சேசுக்கிறீஸ்துவே. சத்திய திருச்சபையானது தான் அங்கிகரித்துள்ள சேசுவின் திருநாமத்தின் பிரார்த்தனையில் சேசுவை “நித்திய ஞான”மென்று அழைக்கிறது. ஞானமானது கட்டிய வீடு திருச்சபையாம். எழு தூண்கள் எழு தேவ திரவிய அநுமானங்களென்கலாம். இவ்வாறே வேதாகம விரித்துரையாசிரியர் செப்புகின்றனர். அர்ச்சியசிஷ்டவர்கள் பலரும் வேதபாரகரும் இவ்வசனத்தை தேவமாதாவுக்கு உவமானமாகவும் எடுத்துக்காட்டியுளர். “ஞானமானவர் தேவசுதன். சரீரமில்லாதவர். அவர் தமக்காகக் கன்னிமரியாயினிடத்து ஓர் வீட்டைக் கட்டி நமது இரட்சண்ணியத்திற்காக மனுவானர்” என்று அர்ச். அத்தனேசியுஸ் சொல்லுகிறார். “அதியுன்னத கடவுள் தமக்காக ஓர் வீட்டைக் கட்டியிருக்கிறார். அதுதான் பரிசுத்த கன்னிமரியாய்” என்பது அர்ச். பெர்நார்தின் அமிர்த மொழிகள். “ஞானமானது ஓர் வீட்டைக் கட்டினது. அதுவே கன்னிகையுந் தாயுமாகிய மரியாய். அங்கு பசாசு குடியிருக்கவில்லை. இச் சத்துருவுக்காக அது கட்டப்படவில்லை. அங்கு துவக்கத்தில் பசாசு குடியிருக்குமாகில் அது கடவுளுக்காகக் கட்டப்பட்டதென்று ஒருவராலுஞ் சொல்லமுடியாது. பசாசுக்காகக் கட்டப்பட்டதென்றால் கன்னிமரியாயைப்பற்றி அப்படிச் சொல்லுவது நமக்குத் தோஷமாமே. அவள் எப்போதும் கடவுளுடைய இல்லமாகவே இருந்தனள். கற்பாறையில் கடைக்காலிட்டு ஸ்திரமாய்க் கட்டப்பட்ட வீடு அவள்” என்று ரயமந்த் ஜோர்தானுஸ் பகர்கின்றார்.

1. அதியாசாரத்திற்குரிய காட்பிரேயென்பவர் குறிப்பிடுவதுபோல் ஒருவன் வீடு கட்ட நினைப்பின் முதல்முதல் அதற்கு வேண்டிய சாமான்களைச் சேகரிக்கவேண்டும். சேகரித்த கல்லிலாகிலும் மரத்திலாகிலும் பழுதுண்டானால் அவற்றைத் தள்ளிவிடுவான். தேவசுதனின் தாயாகிய கன்னிமரியாயும் அவ்வாறே சிருஷ்டிக்கப்பட்டாள். ஜென்ம கர்மப்பாவப் பழுதுகளில்லாது காப்பாற்றப்பட்டாள். மாசு அணுவளவுமில்லாது முற்றும் பரிசுத்தமாயிருந்தபடியால் பரலோக இராசாவுக்கு எற்ற இல்லமானாள்.

2. ஞான வீட்டை எழு ஸ்தம்பங்கள் தாங்கி நின்றன. இத்தூண்கள் இஸ்பிரீத்துசாந்துவின் எழு கொடைகள் என வேதவிற்பன்னர் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். “ஞான வீடு—கன்னிமரியாய். அங்கு எழு தூண்கள் உள்ளன. அவைகளே இஸ்பிரீத்துசாந்துவின் எழு கொடைகளாகிய, ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பத்தி, தெய்வபயம்” என டீக்கன் எனும் சின்னப்பர் உரைக்கின்றார். அதே பிரகாரந்தான் அர்ச். தமியான் இராயப்பரும் விளம்புகின்றார். வேறு சிலர் எழு தூண்களும் கன்னிமரியாயிடத்து துலங்கிய எழு விசேஷ புண்ணியங்கள் என்று கூறுகிறார்கள் என கொர்னேலியுஸ் தெலாப்பிதே வரைந்துள்ளார். தேவ சம்பந்தமான விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேகம் எனும் மூன்று புண்ணியங்களும், ஒழுக்கச் சம்பந்தமான விவேகம், நீதி, திடம், ஒறுப்பு எனுஞ் நான்கு புண்ணியங்களுமான எழு ஸ்தம்பங்களாம். மற்றப் புண்ணியங்களுக்கு ஏற்ற ஆதாரமாக இருப்பதால் அவைகள் ஞான இல்லத்தின் இடமாகவும், தூண்கள் ஆகவும் சொல்லப்படலாம்.

அர்ச். பெர்நார்து இவ்விஷயத்தைப்பற்றித் தான் செய்த பிரசங்கங்களொன்றில் பின்வருமாறு சொல்லுகிறார். கடவுளும் கடவுளிடத்துமிருந்த ஞானமாகிய சேசுநாதர் தமக்காகக் கன்னிமரியெனும் இல்லத்தை யமைத்தார். அதில் எழு தூண்களையும் நிறுத்தினார். அவை

களில் மூன்று மரியாயின் விசுவாசத்தைக் காட்டுகின்றன. ஏனெனில் விசுவாசத்தின் பொருள் தமதிரித்துவமே. நான்கு ஸ்தம்பங்கள் மரியாயின் புண்ணிய சீவியத்தைக் குறிப்பிடுகின்றன. ஏனெனில் ஒழுக்கச்சம்பந்தமான புண்ணியங்கள் நான்கே.

தமதிரித்துவம் தமது மகிமைப்பிரதாபத்தால் மரியாயினிடமிருந்தது. ஆனால் தேவசுதன்மட்டும் அவளிடம் மாம்சமானார். பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்து மூவரும் அங்கிருந்தாரென்பது வெளிப்படை. ஏனெனில் சம்மனசானவர் மரியாயினிடத்துச் சொன்னதாவது: "பிரியதத்தத்தினால் பூரணமானவளே! கர்த்தர் உம்முடனே. இஸ்பிரீத்துசாந்துவானவர் உம்மீதிறங்குவார். அதி உன்னதமானவரின் சக்தி உமக்கு நிழலிடும்" என்பதே. இதிலிருந்து கர்த்தராகிய சேசுவும், அதி உன்னதமானவராகிய பிதாவும், இஸ்பிரீத்துசாந்துவும் மரியாயினிடத்திலிருந்தனரென்று தெரிகின்றதல்லவா? பிதாவின்றி சுதனும், சுதனின்றி பிதாவும், இருவருமின்றி இஸ்பிரீத்துசாந்துவும் இருக்கக்கூடாதே. "நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறார். என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதா தாமே கிரியைகளைச்செய்கிறார்" (அரு. XIV. 13) என்பது தேவசுதனின் திருவாய்மொழி. ஆகவே கன்னிமரியாய் தமதிரித்துவத்தின்மீது விசுவாசப்பற்றுதலுள்ளவளாயிருந்தாளென்பது உண்மை.

ஒழுக்கசம்பந்தமான சதுர்புண்ணியங்களும் அவளிடமிருந்ததோவெனப் பார்ப்போம். உலக ஆவாரங்களைத் துறந்து, சரீர சுகபோகங்களை வெறுத்து கடவுளுக்காகவே முற்றுஞ் சீவிக்கத் தனது கன்னிமையை அவருக்குப் பரித்தியாகஞ் செய்தாள். இதனால் அவளுடைய திடம் தோன்றுகின்றதல்லவா? சலமோன் ஞானியாரின் வார்த்தைகள் கன்னிமரியாயின்மட்டில் சரியாய் பொருந்தும். "வல்லமையுள்ள ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவனார்? தூரமாய்க் கடைகோடிகளினின்றும் அவளுடைய விலைமதிப்பு" (பழ. XXXI. 10). அவள் பலமுள்ளவளானபடியால் பாம்பின் தலையை நசுக்கினாள்.

சம்மனசானவருக்கும் மரியாய்க்கும் நடந்த சல்லாபத்தினின்று அவளது ஒறுப்பும், விவேகமும், நீதியும் நன்கு விளங்குகின்றன. தேவதூதன் 'பிரியதத்தத்தினால் பூரணமானவளே. கர்த்தர் உம்முடனே', என்று புகழ்ந்தபோது, மரியாய் இவ்வுன்னத நவ வரத்தின் நிமித்தம் பெருமைகொள்ளவில்லை. தன்னைப் பெரிதாக எண்ணவில்லை. அதற்கு மாறாக அச்சங்கொண்டாள், மௌனமாயிருந்தாள், இப்பேர்க்கொத்த மங்களம் எனக்கெப்படி உரியதெனச் சிந்தித்தாள். இது அவளது ஒறுத்தலுக்கு அறிகுறியல்லவோ? பின்னர் சம்மனசானவர் தேவசுதன் அவளுதரத்தில் பிறக்கப்போகிற இரகசியத்தைச் செப்பியதும், 'மனிதனை யறியாத என்னிடத்தில் எங்ஙனமாகும்' என வினவினாள். இது அவளது விவேகத்தைக் காட்டவில்லையோ? கடைசியாக அவள் தன்னைக் கடவுளின் அடிமையாகச் சமர்ப்பிக்கின்றாள். இதில் அவளது நீதி தென்படுகின்றதல்லவோ? ஏனெனில் நீதிமான் எப்போதுந் தன்னைத் தாழ்த்திக் கடவுளைக் கனம்பண்ணுவான். "நீதிமான்களோ கடவுளுடைய நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்" என்று தாவீது இராசா வசனிப்பது இதற்கு ஆதாரமாம்.

ஆகவே, மரியாய் தனது கிருத்தியங்களில் உறுதியாக இருந்ததினால் திடமும், சம்மனசானவர் புகழ்ந்தபோது மௌனஞ்சாதித்ததால் ஒறுப்பும், தேவதூதரை வினவினதால் விவேகமும், தன்னுடைய நிலைமையை யறிந்து சொன்னதால் நீதியும் உள்ளவள் என்று வெட்டவெளியாய்க் காட்டியிருக்கின்றனள். விசுவாச ஸ்தம்பங்கள் மூன்றும் புண்ணிய ஸ்தம்பங்கள் நான்குமாக ஏழு தூண்கள்கொண்ட ஓர் வீட்டைத் தேவசுதன் தமக்காகக் கட்டியுள்ளார். அதுவே கன்னிமரியாய். கடவுளுடைய வீடாயிருக்க விரும்புவர் ஏழு ஸ்தம்பங்களையுடைத்தாயிருக்க வேண்டும். அதாவது விசுவாசத்தாலும், புண்ணியங்களாலுங் கடவுளுக்கு உகந்தவளாயிருக்க வேண்டும்.

3. ஓ! இஸ்ராயேலே! கடவுளுடைய வாசஸ்தலம் எவ்வளவு பெரிதானது. அது உயரமும் விசாலமுமானது. தீர்க்கதரிசியானவர் சுட்டிப்பேசுகிற வீடானது உலகம் என்று கொர்னேலியுஸ் தெலாப்பிதே குறிப்பிடுகிறார். கடவுள் சிருஷ்டித்த உலகம் ஆச்சரியமும் விசித்திரமுமானால், அவர் படைத்த வஸ்துக்களில் விசேஷமானதும் பிரதானமானதுமாகிய மரியாயின்

உன்னத அந்தஸ்தை எடுத்துக்கூற வல்லவர் யார்? கானான் தேசத்திலும் தேமானிலும் ஞானம் காணப்படவில்லையென்று பாருக் ஆகமஞ் சொல்லுகிறது. அறிவு பெருகிய அந்நாட்டில் இல்லாதேபோனால் வேறெங்கே கிடைக்கும்? கடவுளால் விசேஷவிதமாய்க் கட்டப்பட்ட வீட்டிற்றான் கிடைக்கும். அதுதான் கன்னிமரியாய். அதுவே ஞான வீடு—ஞானத்தின் இருப்பிடம். அங்கே மெய்ஞ்ஞானமான கடவுள் வீற்றிருக்கின்றார்.

கன்னிமரியாய் ஆண்டவரின் வீடானால், அவர் அங்கே யிருப்பாரானால், அவள் நமக்குச் சொந்தமான வீடன்றோ? "உமது வீட்டின் நன்மைகளில் நாங்கள் சம்பூரணமடைவோம்" என்று தாவீது இராசாவோடு நாமுஞ் சொல்லலாம். நமக்கு அங்கிருந்து வேண்டிய முக்கியமும் அவசியமுமான காரியம் என்ன? தேவமாதாவின் இரக்கமே. அங்குள்ள இரக்கம் வீட்டைப்போலவே விசாலமுள்ளது. "பரிசுத்த ஆண்டவளே! உமது இரக்கத்தின் நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும், ஆழத்தையும் வகுத்துரைக்க யாரால் கூடும்? உமது இரக்கமானது நீண்டு கடைசி நாள்மட்டும் கேட்போர்க்கெல்லாம் உதவுகின்றது; அகன்று உலகத்தை நிரப்புகின்றது; உயர்ந்து பாவியைப் பரலோக ஜெருசலேமிற்கும் கொண்டுபோகின்றது; ஆழ்ந்து மரண நிழலிலும் பாவ இருளிலும் இருப்போர்க்கு இரட்சண்ணியம் பெற்றருளுகின்றது. உமது சகாயத்தால் மோக்ஷம் முக்தர்களால் நிறையப்பெறுகின்றது. நரகம் தனது இரையை இழக்கின்றது. பாழடைந்த ஜெருசலேம் புதுப்பிக்கப்படுகின்றது. பாவிகள் புது சீவியமடைகின்றார்கள்" என அர்ச். பெர்நார்து மரியாயைப் பார்த்து வசனிக்கிறதுபோல் நாமும் அத்தாயை நோக்கி மன்றாடுவோமாக!

(இன்னும் வரும்)

M. S. M.

உன் பெரியோர்கள் சுவாமிக்குப் பதிலாளிகளென்று எண்ணி அவர்களுக்கு நுணுக்கமாய்க் கீழ்ப்படிவாயாக.

உனக்கு மற்றவர்களால் வருந் துன்பங்களை நல்ல மனதோடு பொறுத்துக்கொண்டு அவைகளைக் குறித்து ஒருவரிடத்திலும் பேசாதிருப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

8-ம் அதிகாரம்.

அகுஸ்தீன் உரோமாபுரிக்குப்போய் அங்கு வியாதிப்படுவது—மோனிக்கம்மாள் அவருக்காகச் சிந்திய கண்ணீர்களின் பலன்—இதுவரையில் நேர்ந்த கண்டங்களைவிட பயங்கரத்துக்குரியதான ஒரு புதிய கண்டம்—சர்வழம் சந்தேகமே—தன் மகனுக்குத் தஞ்சமாக மோனிக்கம்மாள் தீவிரித்துப்போவது.

(முன் தொடர்ச்சி.)

அர்ச். இராயப்பரின் கப்பல் மாலுமியாகப் பெயர் பெற்ற அர்ச். தமாசுஸ் என்பவர் சுக்கானில் இருந்தார். அதாவது திருச்சபையை அர்ச். தமாசுஸ் என்பவர் ஆண்டுவந்தார். அவருடைய காரியதரிசி அர்ச். ஜெரோம் என்பவர். இவர் பூர்வத்தில் சீவித்த பாவச்சீவியத்தையும், பிறகு தன் பாவங்களுக்காகப் பச்சாத்தாபப்பட்டு வேத விஷயத்தில்கொண்டிருந்த அபிமானத்தையும் நாம் முன்னதாகவே சுருக்கத்தில் காட்டியிருக்கிறோம். இவர் இப்போது தேவநேசத்தினால் மறுரூபமடைந்து, திருச்சபை முழுதுமே தன் வாக்குச்சாதுரியத்தைக் கண்டு வியப்படையும்படியானவிதமாய்ப் பிரசங்கம் செய்துவந்தார். அகுஸ்தீன் இத்தாலியாவில் சேர்ந்த வருஷத்திற்கு முந்தின வருஷத்தில், மெத்தவும் தர்க்கிக்கப்பட்டுவந்த சில வேதசத்தியங்களைத் தீர்மானிக்கும்படியாகப் பாப்பானவர் உரோமாபுரியில் ஒரு பொதுச் சங்கம் கூட்டினார். திருச்சபையின் அதிபிரபலம் பொருந்திய மேற்றிராணிமாரும், மிலான்நகர் அர்ச். அமிர்தநாதரும், சைப்ரஸ் நகர் அர்ச். எபிபானியூஸும், அக்குய்லாநகர் அர்ச். வலேரியாரும், அந்தியோக்கியாபுரி பாலினுஸும், மற்றும் சாங்கோபாங்கத்தில் தேர்ந்து புண்ணியப்பயிற்சியடைந்தவர்களான எண்ணிக்கையற்ற வேறு மேற்றிராணிமார்களும், குருப்பிரசாதிகளும், அதற்கு விஜயஞ்செய்தனர். அத

லால் அகுஸ்தீன் அங்கு வந்தபோது, ஏகம், பொது, தவறுமை என்னும் இலட்சணங்களால் விளங்கப்பெற்ற திருச்சபையின் பெருமையை மறுக்கக்கூடாத அத்தாட்சியுடன் கண்காட்சியாகக்கண்டு வியப்படைந்தார். திருச்சபை ஸ்தாபகமானதிலிருந்து பதினெட்டு முறை இப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பாடாயின.

மேலும் உரோமான் கத்தோலிக்கு வேதமானது, கல்லான இருதயமும் கரைந்துபோகக்கூடியதான இன்னொரு அருங்காட்சியை நமக்குக் காட்டுகின்றது. அதேதெனில் கல்வாரிமலையின் சிலுவையடியில், ஒரே நேரத்தில் உலகத்திற்கிறங்கிவந்த விரத்தத்துவம் பிறசிநேகம் என்னும் இரண்டு சகோதரிகள், கைகோர்த்துக்கொண்டு, தாங்கள் போகும் இடமெல்லாம் வீலி புவ்ஷபங்களையும் உரோஜாமலர்களையும் இறைத்துக்கொண்டு, உலகத்தின் அஷ்டதிக்குகளிலும் சுற்றித் திரிந்துகொண்டிருப்பதேயாம். உரோமாபுரியில்முதலாய் விபியோ, கிராக்குஸ், கமில்லுஸ், மார்செல்லுஸ் முதலியவர்களும், இவர்களைப்போன்ற சிறந்த வங்கிஷாதிபதிகளும், பிணியாளர் சாலைகளை ஸ்தாபிக்க, அவர்களுடைய சொந்த மக்களாகிய உயர்குலத்து பால்ய கன்னிகைகள், வியாதியஸ்தர்களைப் பராமரித்து, அவர்களுடைய புண்களைக் கழுவி, கால்களை முத்தமிடுவதை யாவருங்கண்டு, இப்படிப்பட்ட பிறசிநேகத்தை மனிதர்களுடைய மனதில் தூண்ட, சத்திய வேதம் ஒன்றினால்மாத்திரம் கூடுமென்று ஒரே வாய்மொழியாய் ஒத்துக்கொண்டு, பிரமிப்படைவார்கள்.

உருக்கமுள்ள விசுவாசத்தினாலும், மெய்யான பத்தியினாலும், உலகத்தாரை மேற்கொண்டவர்கள் சிலர் அப்போது உரோமாபுரியில் வசித்திருந்தனர். இவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். வண்டானது மகரந்தம் நிறைந்த புவ்ஷபங்களை மொய்த்துக்கொள்ள, அப்புவ்ஷபங்கள் தங்கள் இதழ்களைத் தளரவிட்டு, தங்கள் தேனால் அவ்வண்டுகளை யூட்டுவதற்கொப்ப, பவலா, பபியோலா, இஸ்தொக்கியூஸ், மார்ஸெல்லூஸ் முதலியவர்கள் அர்ச். ஜெரொமென்பவரைச் சூழ்ந்திருக்க, அவர் அவர்களுக்கு வேதாகமப் பொருள்களை வியாக்கியானித்துக் காட்டித் தேவ வெளிச்சத்தால் அவர்களுடைய ஆத்துமங்களை நிரப்பி, அவர்கள் தங்களையே துறந்து, ஆழ்ந்த தேவசிநேகத்தினால் தூண்டப்பட்டுக் கடவுளுக்காகவும் மனிதர்களுக்காகவும் எவ்வித சுயப்பரித்தியாகக் கிருத்தியங்களையும் செய்யும்படி, அவர்களது இருதயங்களைப் பக்குவப்படுத்திவந்தார்.

கொஞ்சம் நல்ல மனதுடன், எவ்வித குரோதமுமின்றி, அகுஸ்தீன் இக்காட்சியைக் கண்டிருப்பாரேயானால், சந்தேகமின்றி அதற்கு வசியப்பட்டுப்போயிருப்பார். ஆனால் பொருள்களை உற்றுப்பார்த்தும், அவைகளைக் கண்டுணராமற்போகும் மனோஸ்திதியும் நம்மிடமுண்டு. கத்தோலிக்கு வேதமானது, கடவுளுக்கும் மனிதனுக்கும் சற்றேனும் பொருந்தாத போதனைகளையும், மனுப்புத்திக்கு முழுதும் ஒவ்வாத போதனைகளையும், மனிதனுக்கிருக்கும் சாமர்த்தியத்தையும் அறிவு தீவிரத்தையும் முழுதும் அடக்கிக் கேவலம் அவனை ஒரு பேதையாகச் செய்யும் போதனைகளையும், போதித்துவருவதாக அகுஸ்தீன் அப்போது கண்டிப்பாய் நம்பியிருந்தபடியால், அவ்வேதத்தைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்று கனவில்முதலாய் சற்றேனும் நினைத்தவரேயல்ல. ஆனால் இன்னின்னவைகள்தாம் அதன் சரியான போதனைகளென்று தனக்கு விளக்கிக்காட்டக்கூடுமான ஒரு கத்தோலிக்கு வித்தியார்த்தியை நாடிப்போவது நன்றென்று ஒருவிசைமாத்திரம் அவருக்கும் எண்ணம் பிறந்தது. ஆனால் அப்படிப்போவதினால் பயனில்லையென்று நினைத்ததினாலேயோ, அல்லது சத்தியத்தின்மட்டில் இயற்கையாயிருக்கும் அச்சத்தினாலேயோ, அல்லது அப்படிப்பட்ட சத்தியத்தை யேற்றுக்கொள்ள நேரும்பட்சத்தில்தான் தன் துர்மார்க்கத்தை ஒழித்து செய்யவேண்டியிருக்கும் சுயப்பரித்தியாகத்தை நினைத்து பயந்தோ, அவ்வெண்ணத்தை முழுதும் ஒழித்துவிட்டார். திருச்சபையின்மட்டில் இவ்விதமான தப்பெண்ணங்கொண்டும்மனேக்கிய போதனைகள் அபத்தமானவைகளென்று தன் சொந்த அநுபவவாயிலாய் அறிந்துகொண்டும் கிரேக்கு தத்துவசாஸ்திரங்களைத் தேடிப்பார்த்ததில் தான் நாடித்தேடிய சத்தியம் கிடைக்காமற்போனதைநினைத்து அதைரியங்கொண்டு, சர்வமும் சந்தேகமென்று தீர்மானித்து, சகலத்தின்மட்டிலும் சந்தேகங்கொண்டவராய், சத்தியம் என்பது வெறுங் கனவுதா

னென்றெண்ணி, அதை விரும்பியும் விரும்பாத வரைப்போல தன் மனதை ஒருவாறு சமாதானப்படுத்திக்கொள்ளத் தொடங்கினர். இப்படி சிந்தித்துச்சிந்தித்து, உலகத்தில் முழுதும் நிச்சயமானது எதுவுங் கிடையாதென்று போதிக்கும் அக்காதெமிஷியன் என்னும் தத்துவசாஸ்திரிகள் சங்கத்தில் சேர்ந்துகொண்டார்.

இது எப்படிப்பட்ட நிர்ப்பாக்கியமுள்ள காட்சி! எவ்விதமான நவீன காரியம்! மேலான புத்திசூட்சுமமுள்ளவர், சத்தியத்தைக் கண்டடையக்கூடுமான சகல இலட்சணங்களையும் உடைத்தாயிருக்கிறவர், அநேக வருஷங்கள் வரைக்கும் வியர்த்தமாயதைத்தேடி, மனிதனின் புத்தித்திறமை யென்னும் சமுத்திரசாகரத்தில் இப்பக்கத்திலும் அப்பக்கத்திலும் அலைமோதப்பட்டு, கடைசியாய் சர்வமும் சந்தேகம் என்னும் கோட்பாடே நிச்சயமானதென்றும், சத்தியமென்பது சுரங்கண்டவன் கண்ட கனவுக்குச் சமானமென்றும் ஒத்துக்கொள்ளுகிறுர். சந்தேகமே எங்கும் வியாபித்திருக்கின்றது. பிரகாசித்துவந்த தீபம் அணைந்துபோயிற்று. அது அணைந்துபோகவே அகுஸ்தீன் தன் விழிகளை மூடிக்கொண்டு "நிச்சயமானது எதுவும் கிடையாது" என்னும் தன் புதிய கோட்பாடாகிய தலையணையின்பேரில் தலை வைத்துக்கொண்டு, சற்று இளைப்பாறப்பார்க்கிறுர். Et nunc reges intelligite "சாஸ்திரக் கலைக்கியான அறிவில் தீரர்களே, கண்டுபிடியுங்கள் சத்தியத்தைத் தேடுபவர்களே, அறிந்து கொள்ளுங்கள்."

மனிதன் இப்படிப்பட்ட அபத்தக் கோட்பாட்டில் நம்பிக்கைவைத்து, சற்று நேரமாவது மனோசமாதானமடைவது கூடுமான காரியந் தானே? பரிச்சேதமில்லை. அப்படி மனோசமாதானமடைகிறவர்களும் சிலர் இருக்கிறுர்களென்பது உண்மையாயினும், அகுஸ்தீன் அப்படிப்பட்டவரல்ல. அவர் இருதயம் பாவக்கறை பட்டதாயினும், அவருடைய விசாலமான புத்தித்திறமையானது, அந்தகாரத்தை நேசிக்கும்படியாக அவ்வளவு கேடுகெட்டதன்று. ஆதலால் அவர் உரோமாபுரியில் பற்பல ஜனப்பழக்கமுள்ளவராயிருந்தபோதிலும், கலைக்கியானசாஸ்திரங்களில் திவ்யமான சந்தோஷத்தை அநுபவித்துவந்த போதிலும், தனது உத்தியோகத்தில் அநுகூலமடைந்து சுகசவுக்கியத்துடன் வாழ்ந்துவந்த போதிலும், அவரது ஆத்துமத்தின் கலக்கத்தைச் சாந்தப்படுத்த எதனுலும் முடியாமற்போயிற்று. ஆதலால் துக்காக்கிராந்தராய், இந்தப்பக்கத்திலும் அந்தப்பக்கத்திலும் புரண்டுபுரண்டு படுத்த போதிலும், ஒரு பக்கத்திலும் இளைப்பாற்றியடையாத வியாதியஸ்தனுக்கொப்ப, நாம் மேலே சொல்லிய பொய்க் கோட்பாட்டிலும் யாதொரு ஆறுதலும் அடையாமல், சித்தசலனங்கொண்டிருந்தார்.

இப்படி அவர் ஓயாமல் அநுபவித்துவந்த மனக்கலக்கத்தினுல், கடைசியில் கடின சுரங்கொண்டு, பிழைப்பாரென்னும் நம்பிக்கையற்று, சில நாள்வரைக்கும் வியாதிப்பட்டார். அவர் சொல்வது "என் கர்த்தாவே, உமக்கும் எனக்கும் என் அயலார்களுக்கும் விரோதமாக நான் கட்டிக்கொண்ட பாவங்களோடு மரித்து, நரக பாதாளத்தில் விழவிருந்தேன். இன்னும் என்னை விட்டு நீங்காதிருந்த ஜன்மப்பாவ தோஷமன்றி நான் கட்டிக்கொண்ட கர்மப்பாவங்களும் அநந்தமாயும் பயங்கரத்துக்குரியவையாயுமிருந்தன."

இருந்தும், இப்படிப்பட்ட நிர்ப்பாக்கியத்துக்குரிய அபாயத்தில்முதலாய், கர்த்தரைப் பார்த்து ஒரு செபமாவது செபித்தவரேயல்ல. இருபது வருஷங்களுக்குமுன், சிறு குழந்தையாய் ஒரு கிறீஸ்துவ தாயாரின் பார்வையிலிருந்தபோது, தனக்கு ஒரு கஷ்டம் நிர்ப்பாக்கியம் நேரிடும்போது, கடவுளையும் நித்தியத்தையும் தியானித்து ஆறுதலடைவார். ஆனுல் இப்போதோவெனில், பெரிய மனிதனென்று வாழ்ந்து வந்தும், ஒரு பிரபலமான பட்டணத்தில் தன் தாயாருடைய கவன கரிசனைதப்பி, தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்படாமல், மனக்கடினங்கொண்டு ஒரு ஜெபமாமது, அவஸ்தை ஆயத்தமாவது இல்லாமல் திருச்சபையை எளனஞ் செய்துகொண்டு, அவிசுவாசியாய் மரிக்கும் ஆபத்திலிருக்கிறுர். அவர் சொல்வது "அந்த எனது பெரிய ஆபத்தில், உமது திவ்ய ஞானஸ்நானத்தை நான் அவ்வளவாய் விரும்பவில்லை. நான் முட்டாளானபடியால், என் ஆத்துமத்திற்குப் பரம அவுஷதமாக நீர் செய்திருக்கும் ஏற்பாட்டைப் பரிகாசஞ்செய்தேன். ஓ! என் கர்த்தாவே! அச்சமயத்தில் நான் செத்திருந்தால் எங்கே போயிருப்பேன்? என்றும் மாறுத உமது திவ்ய திருவுளப்படி, என் அக்கிரமத்திற்குத் தக்க

தண்டனையாக நெருப்பில் வெந்து வாதைப்படும்படி நரகத்திற்கல்லவோ போயிருப்பேன்.”

நல்ல வேளைக்குச் சுரமுங் குறைந்தது. அகுஸ்தீனுக்கு ஆபத்தும் நீங்கினது.

இவ்வபாயத்திலிருந்து கடவுள் என் தன்னைக் காப்பாற்றினாரென்றும், மரண ஆபத்தான அச்சமயத்தில், சர்வ வல்லபமுள்ள கடவுளைத் தான் பழித்துப்பேசி, அவமதித்துக்கொண்டிருக்கும்போது, தேவகோபம் தன்னை நிர்த்தூளியாக்காமல், யாருடைய சலிகையினால் அமர்ந்திருந்ததென்றும் சிந்தித்து, அதற்கெல்லாம் காரணம் தன் தாயாரேயென்று தான் எழுதிய சங்கீர்த்தனம் என்னும் புஸ்தகத்தில் சொல்லுகிறார். மீண்டும் அவர் சொல்வது “நான் வியாதியாயிருந்தது அவளுக்குத் தெரியாது. நான் அவளைவிட்டுத் தூரத்தில் இருந்தபோதிலும், எனக்காகச் செபித்துக்கொண்டிருந்தாள். என் மட்டில் அவளுக்குண்டான நேசத்தையும், என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுக்கப் பட்ட பிரசவ வேதனையைவிட, பத்து மடங்கு அதிகமான வேதனைப்பட்டு எனக்கு ஞான சீவியம் உண்டாக்கப்பட்ட பாட்டையும், என் வாக்கால் விவரிக்க முடியவேமுடியாது.”

பிறகு, மனிதனுடைய நாவானது அல்லது அவனது இருதயமே வெளிப்படுத்தமுடியாத அப்படிப்பட்ட வாக்குச்சாதுரியத்துடன் அவர் சொல்வது “என் தேவனே! நான் அப்போதிருந்த ஸ்திதியில் மரிக்க நீர் விடவில்லை. அப்படி நீர் விட்டிருந்தால் என் மரணம் என் தாயாரின் இருதயத்தை ஊடுருவத்தக்க அப்போர்க்கொத்த வியாகுல வாளுக்குச் சமானமாயிருக்குமாகையால், அப்படி நான் மரணமடைந்து அவளிருதயம் காயப்படும்பட்சத்தில், அவளை யெவ்விதமாகச் சொஸ்தப்படுத்தக்கூடுமென்பதை யான் காண்கிலேன்” என்கிறார்.

(இன்னும் வரும்.)

சுவாமியினுடைய சித்தமானாலொழிய ஒருவருக்கும் அப்பிரியப்படாதே. உன்னால் ஆருக்காகிலும் கஸ்திவந்தால் பொறுத்தல் கேட்பாயாக.

உனக்கு மற்றவர்களால் வருந் துன்பங்களை நல்ல மனதோடு பொறுத்துக்கொண்டு அவைகளைக் குறித்து ஒருவரிடத்திலும் பேசாதிருப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

MARIAN CONGRESS.
மரியாயின் மகா சங்கம்.

(*Communicated*).

அப்போஸ்தலர் காலந் தொட்டு கிறீஸ்துவர்களுக்குள் தேவதாயாரின்பேரில் பக்தி உண்டென்பதை யார் மறுப்பார்? யூதர் முதலாய் ஆதியுகத்திலிருந்து கன்னிமரியாயின்மட்டில் பக்திவைத்து, அப்பரிசுத்தமாதா விசேஷ விதமாய் வணங்கப்படும் திருஸ்தலங்களுக்குத் திருயாத்திரைசெய்து, அவ்வாண்டவள் மூலமாய் தாங்கள் பெற்ற உபகாரங்களுக்கு நன்றி செலுத்திவருகிறார்கள். மகம்மதியரும், விசேஷமாகப் பலஸ்தீனா நாடுகளிலுள்ளவர்கள் கன்னித்தாயாரைப் பூசித்துவருகிறார்கள். புரோட்டெஸ்டாண்டு மதம் உண்டான காலத்தில் அம்மதத்தார் தேவதாயாரை வணங்கிப் புகழுவது சரியல்லவென்று பிதற்றினர் என்றாலும், இக்காலத்தில் அம்மதத்தாருக்குள் அநேகர் கன்னித்தாயாருக்குச் சங்கை வெகுமானங் காட்டிவருகிறார்கள்.

கிருபாதயாபமுள்ள சர்வேசுரன் தமது கன்னித்தாயாரை எப்போதும் நேசிப்பதுமல்லாமல், சகலரும் அவளைச் சங்கித்து நேசிக்கும்படி சித்தங்கொண்டு, அந்த ஆண்டவள்பேரால் கணக்கற்ற அற்புத அதிசயங்களைச் செய்யவுந் திருளமானார். இப்போதும், லூர்துநகரில் தேவதாயார்மூலமாகச் சர்வேசுரன் செய்துவரும் எண்ணிலடங்காத அதிசய ஆச்சரியங்களைப்பற்றி தினசரி பத்திரிகைகள்மூலமாகவும் புஸ்தகங்கள்மூலமாகவும் நாம் அனைவோரும் கேள்வியுற்றுவருகிறோம். “தலைமுறை தலைமுறையாக சகல ஜாதி ஜனங்களும் என்னைப் பாக்கியவதியென்று கூறுவார்கள்” என்று அத்திருக்கன்னிகை மொழிந்த தீர்க்கதரிசனப்பிரகாரம் நமது சத்திய வேதம் ஸ்தாபகமானகாலந்தொடங்கி இக்காலம்வரைக்கும் மோட்ச இராக்கினியைப் புகழ்ந்து ஸ்துதித்து தங்களுக்கு அவசரமான நன்மை உபகாரங்களைச் சர்வேசுரனிடத்திலிருந்து பெற்றருள்வாள் என்னும் நம்பிக்கையுடன் எல்லோரும் அவ்வாண்டவளைப் பிரார்த்தித்துவருகிறார்கள்.

மேலும் நம் இந்தியா தேசம் இந்த விஷயத்தில் பின்னடைந்ததல்ல. இத்தேசமெங்கும், பெரிய நகர்களிலும் சிறிய ஊர்களிலும் தேவதாயார்பேரால் தேவாலயங்களும், பீடங்களும் எழுப்பப்பட்டிருப்பதுடன், சகலரும் அப்பாமகாயகியின்மட்டில் பக்தி பற்றுதல்கொண்டு, நம்பிக்கையுடன் அவளை வேண்டிக்கொண்டு, அந்த ஆண்டவளுக்குத் தோத்திரமாக தேர் திருவிழாக்களை ஆரவாரச் சிறப்புடன் நடத்திவருகிறார்கள். இது நிற்க, இவ்வாண்டவள்மட்டில் தங்களுக்குள்ள பக்தி நம்பிக்கையைக் காட்டும்படியாக அவளது ஜன்மப்பாவமில்லாமல் உற்பவித்த சபை, உத்தரிய சபை, ஜெபமாலை சபை, வியாகுல சபை முதலிய அநேக பக்திக்குரிய சபைகளில் சேர்ந்து, அந்த சபைகளின் சட்ட திட்டங்களைப் பிரமாணிக்கமாய் அனுஷ்டித்து, தங்கள் திருத்தாயாருக்கு உகந்த பிள்ளைகளாய் ஒழுகிவருகிறார்கள். புகழ்ச்சிக்குரிய இப்பேர்ப்பட்ட நடத்தை மோட்ச இராக்கினிக்கு எவ்வளவோ சந்தோஷானந்தத்தை உண்டாக்கும்! இவ்வாறு தம்மைப் புகழ்ந்து கொண்டாடி மகிமைப்படுத்தும் தமது தாசருக்கு அப்பாம ஆண்டவள் எவ்வளவோ அரிதும் ஏராளமுமான கொடைகளை அருளுவாள்!

இவற்றிலும் மகத்தானதோர் சம்பவம் தேவதாயாருக்கு ஸ்தோத்திரமாக வருகிற ஜனவரி மாதம் 13, 14, 15-ந் தேதிகளில் நமது தேசத்தில் நடந்தேறப்போகிறது. அது மரியாயின் சங்கம் என்னப்படும். நமது தேசத்தில் ஒருபோதுங் கேள்விப்படாத சிறந்ததும் மகிமைதங்கியதுமான இந்த அபூர்வ சம்பவம் இராஜதானிநகராகிய சென்னைமாநகரில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால், சென்னைபுரி நிவாசிகள் இச்சங்கதியை அறிந்து சந்தோஷித்து மகிழுவார்களெனச் சொல்லத்தேவையில்லை. ஆனால் சென்னைபுரியார் தங்களூரில் இப்பெருஞ் சங்கங்கூட இருப்பதால் பெருமகிழ்ச்சிகொள்வதுமாத்திரம் போதுமென்றிராமல் இந்தியாவின் பல நாடுகளிலிருந்தும், பர்மா, சிலோன் முதலிய நாடுகளிலிருந்தும் மகா சங்கத்துக்கு வரும் அதிதிகளுக்கு அன்புடன் நல்வாவு தந்து உபசரிக்கத் தங்களால் கூடியவற்றைச்செய்ய ஒருவாறு கடமைப்பட்டுள்ளாரன்றோ?

அபூர்வமான இம்மகா சங்கத்தை நமது பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் அன்பு கூர்ந்து அங்கீகரித்து, இச்சங்கத்தார் அனைவோருக்கும் தமது அப்போஸ்தோலிக்கு ஆசீர்வாதத்தைப் பாலித்திருக்கிறார்.

இச்சங்கத்துக்கு அக்கிராசனம் வகிக்க அர்ச். பாப்பானவர் தம்முடைய இந்திய ஸ்தானாதிபதியையே நியமித்திருக்கிறபடியால், மிகவும் வந். பீட்டர் பைசானி ஆண்டவரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருக்க ஒப்புக்கொண்டு, மகா சங்கம் அனுகூலமாய் முடிவுபெற ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் சர்வ பிரயத்தனமும்பட்டுவருகிறார். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய நாடுகளின் திருச்சபைத் தலைவர்களாகிய பிதாப்பிதா, அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், அதிசிரேஷ்டர் முதலியவர்களும் இம்மகா சங்கம் நன்கு நடைபெறும்படிக்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதுடன், குறிக்கப்பட்ட நாட்களில் சென்னைக்கு விஜயஞ்செய்து சங்கத்தின் நடவடிக்கைகளைச் சிறப்பிப்பார்கள். அந்த நாட்களில் நூற்றுக்கணக்கான குருப்பிரசாதிகளும் ஆயிரக்கணக்கான கிறீஸ்துவப் பிரஜைகளும் சங்கத்துக்கு விஜயஞ்செய்து தேவதாயாரை மகிமைப்படுத்துவார்கள்.

இந்த மகா சங்கத்தை ஒழுங்கோடு நடத்தும்படிக்கு 6 கம்மிட்டிகள் ஏற்பட்டு சமயோசிதமான ஏற்பாடுகளை நிர்ணயித்து வருகிறார்கள். ஒவ்வொரு கம்மிட்டியிலும் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய நாடுகளிலுள்ள அனேக குருப்பிரசாதிகளும், கனவான்களான ஸ்திரீ பூமான்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டியார் மகா சங்கம் ஒழுங்காய் நடைபெறுவதற்கான ஒழுங்கு திட்டங்களை முஸ்திப்புச் செய்துவருகிறார்கள்.

சங்கத்துக்கு வரும் அநேக ஆயிரம் ஜனங்கள் ஒரு இடத்தில் சபைகூடித் தேவாராதனை செய்வது அசாத்தியமாகையால், சென்னையிலும், திருமயிலையிலும் உள்ள அனேக தேவாலயங்களில் திவ்யபூசை, பிரசங்கம், செபம், வாசகம், சுற்றுப்பிரகாரம், திருப்பாடல் முதலியவைகள் குறிக்கப்பட்ட மணித்திட்டப்பிரகாரம் ஒழுங்காய் நடைபெறும்.

சங்க முடியுங் கடைசி நாளில் ஒவ்வொரு தேவாலயத்திலிருந்தும், ஏராளமான

கிறீஸ்துவர்களும், குருப்பிரசாதிகளும், மேற்றிராணிமார்களும் சமுத்திரக்கரை யோரத்தில் குறிக்கப்பட்ட இடத்திற்குச்சென்று அங்கிருந்து சென்னை, கோட்டைக்கு அருகிலுள்ள ஐலண்டு "தீவு" என்று அழைக்கப்படும் பெரிய மைதானத்தில் விசித்திர விநோதமாய் அமைக்கப்பெற்றிருக்கும் பிரமாண்டமான பந்தலுக்குச் செபித்துக்கொண்டும்,தேவ பாடல்களைப் பாடிக்கொண்டும் பவனிசெய்யத் திவ்யநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்படுமென்று சொல்லப்படுகிறது.

ஆகையால் நாம் அனைவோரும் இம் மகா சங்கத்தை வேடிக்கை விநோதகாரணமாகப் பாவியாமல், அதனால் நமது திருச்சபைக்குவிசேஷித்த நன்மையும்,வெற்றியும் உண்டாகி, திருச்சபை என்றென்றும் விஸ்தரித்துச் செழித்தோங்கி பிரபலியமாகும் காரணமாகப் பாவிப்போமாக. இதற்காக நாமனைவோரும் ஒன்றுகூடி உழைப்பதுடன் ஜெபத்தால் தேவ உதவியைத் தேடவேண்டும். ஆம், ஜெபத்தால்மாத்திரம் இந்த விசேஷித்த காரியம் அனுகூலமாகுமாகையால், கிறீஸ்துவர்கள் அனைவோரும் இன்றுமுதல் சங்கம் முடிவுபெறுமட்டும் "மோட்ச இராக்கினியே! மனுக்குலத்தின் ஆண்டவளே! அக்கியானமும் பதிதமதமும் அழிந்து, சர்வேசுரனுடைய இரட்சண்யம் உலகெங்கும் பரவி, திருச்சபை வெற்றிபெற்று, மனுக்குலம் முழுதும் உமது திருக்குமாரனுடைய பிரதிநிதியின் ஆளுகைக்குட்பட்டு, சேசு கிறீஸ்துநாதரைத் தயாள மெய்ஞ்ஞான கடவுளாகவும், இரட்சகராகவும் விஸ்வசித்து, ஆராதித்து, அவருடைய திருத்தாயாராகிய உம்மைத் தாயாகவும், அரசியாகவும், மாதாவாகவும் வணங்கிப்போற்றிப் புகழச்செய்யும் தாயே!" என்று மன்றாடுவோமாக.

சமீபத்தில் உரோமாபுரியிலுள்ள விசுவாசப் பரம்புதல் சபையாரிடமிருந்துவந்த அறிக்கையின்படி, இந்தியா, பர்மா, சிலோன் நாடுகளிலுள்ள மேற்றிராசனத் தலைவர்கள் மரியாயின் மகா சங்கம் சரிவர நடைபெறவும், இந்தியா தேச முழுவதும் சத்திய வேதத்தில் உட்படவும் வேண்டிக்கொள்ளும்படியாக தத்தம் மேற்றிராசனத்துக்காக நியமிக்குஞ் செபங்களை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு 300 நாள் பலன் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுத்தரவின்படி அந்தந்த மேற்றிராணியாரும் தத்தம் மேற்றிராசனக் கிறீஸ்துவர்களுக்காக நியமிக்கும் செபத்தை அவரவர்களும் அறிந்துகொண்டு அதைச் சங்கம் முடிவுபெறும்பரியந்தம் நாடோறும் வேண்டிக்கொள்வார்களாக.

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—3.

டோலிடோவுக்குப் பிரயாணம்.

(முன் தொடர்ச்சி.)

அூரா என்னுங் கிராமத்தைக் காணவே செபஸ்தியான் முகம் மலர்ந்தது. ஏனெனில் அவன் ஏறியிருந்த குதிரை இனி நடக்கவே முடியாதென்னும்படியான அவ்வளவு கேவல ஸ்திதியிலிருந்தது. அந்தக் கிராமத்தண்டையாவது தன்னைக்கொண்டுவந்து சேர்க்கப் போதுமான பலத்தைத் தன் அசுவத்துக்குக்கொடுத்த கிருபாமூர்த்தியாகிய சர்வேசுரனுக்கு நன்றியறிதல் புரிந்தான்.

கிராமத்துக்கு வெளியிலேயே இறங்கி, குதிரையைத் தன்னிச்சையாய் மேயும்படிவிட்டு, கிராமத்தை நோக்கி நடந்தான். ஊருக்குள் நுழைந்ததும் ரூபன் என்னும் யூதவர்த்தகனது வீடு எங்கேயென விசாரிக்க, அவன் அவ்வூரில் பேர்போன வர்த்தகன் என்றும், அவன் தன் ஜாதியாரின் வழக்கம்போல் பலவித வியாபாரங்கள் செய்துவருபவனென்றும் தெரிந்துகொண்டான். குதிரை, கழுதை முதலிய மிருகங்கள் விற்பவர்களில் முதன்மையான வியாபாரி ரூபன்; தேசத்தில் பட்டு வியாபாரத்தில் பேர்போனவன்; சாராய தினுசுகளிலும் பலத்த வியாபாரம் செய்துவருபவன். நமது யௌவனவீரன் அவன் வீட்டை நாடிப்போய் அவனைக்கண்டான். ரூபனும் வீரனை வெகு மரியாதையுடன் வரவேற்று,

பென்தாவீது கொடுத்த நிருபத்தை வாங்கி வாசித்ததும், சிரம்வணங்கி நமஸ்காரஞ்செய்து நின்ருன். வீரன் வந்திருக்கும் அவசரத்தை யுணர்ந்தவளுய், சற்றுங் காலதாமதம் செய்யாமல், தன் குதிரைக் கொட்டகைக்கு அவனை அழைத்துச் சென்ருன். அவ்விடத்தைக் கண்டதும், பென்தாவீது அதனை சிலாக்கித்துப்பேசியது நியாயமென்று செபஸ்தியான் கண்டுணர்ந்தான். பலத்துக்கும், வேகத்துக்கும், உடல் வனப்புக்கும் தமக்கு இணையில்லையென்று சொல்லும்படியான அரபிக் குதிரைகளில் சிறந்தவை அங்கே நிறைந்திருந்தன. அவற்றைப் பார்த்ததும் செபஸ்தியான் மனம்பூரித்தது. தனக்கிஷ்டமான குதிரையைத் தெரிந்துகொண்டதும், ரூபன் அதைப் பிடித்து செபஸ்தியான் கையில் ஒப்புவித்தான். "குதிரைகளைத் தெரிந்தெடுப்பதில் செபஸ்தியான் பிரபு சமர்த்தர் என்பதில் தடையே கிடையாது!" என்று ரூபன் தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டான்.

"இந்தக் குதிரையின் விலையை நான் உனக்குக் கொடுக்கும்வரையில் பென்தாவீதன் நாமத்தையே ஜாமீனுக வைத்துக்கொள்ளக்கூடுமா?" என்று யௌவனவீரன் கேட்டான்.

"அதைவிட மேலான ஜாமீனும் உண்டா? பிரபுவே! பென்தாவீதின் கையொப்பம், வெள்ளி, பொன் முதலிய உலோகங்களிலும் விலையுயர்ந்ததென அறியீரோ?"

ரூபனைச் சோதிக்கவேண்டுமெனச் செபஸ்யான் தன் மனதில் எண்ணிக்கொண்டு, "நல்லது, யூதா! அவன்போரால் உன்னைக் கேட்கிறேன். ஆயிரம் பூவராகன் வேண்டும், என்ன சொல்லுகிருய்?" என்ருன்.

"தாங்கள் கேட்ட தொகை இதோ இருக்கின்றது, எடுத்துக்கொள்ளும்."

"இன்னும் ஒன்பதினுயிரம் எனக்கு வேண்டியதாயிருக்கிறது. கொடுக்கமுடியுமா?"

ரூபன் மறுபேச்சுப்பேசாமல் உடனே தன் இருப்புப்பெட்டியைத் திறந்து பொன்னுணயங்கள் நிறைந்த ஒன்பது பைகளை எடுத்து மேஜையின்மேல் வரிசையாக வைத்தான். "நீர் கேட்டவை இதோ இருக்கின்றன; ஆனல் தங்களுக்கு வேண்டியது இவ்வளவுதானு?" என்ருன்.

இதைக்கண்ட செபஸ்தியான் பிரபுவுக்கு உண்டான ஆச்சரியத்திற்களவில்லை. இதுவே போதுமானது; இதற்குமேல் எனக்கொன்றும் வேண்டியதில்லை. ஆனல், நீ இவ்வளவு நன்கு மதிப்புடன் புகழ்ந்துபேசும் பென்தாவீதென்பவன் யார்?"

"பென்தாவீதின் நாமம் ஆண்டவருக்குப் பிரியப்பட்டதாம்; அதை நேசித்து மரியாதை செய்யாதார் ஒருவருமில்லை. பெரியோர், சிறியோர், தனவந்தர், ஏழைகள் ஆகிய எல்லோருக்கும் அவர் விஷயத்தில் மரியாதையே. கல்வியிலும், செல்வத்திலும் எங்கள் ஜாதி ஜனங்களில் அவருக்கிணையாவார் எவருமில்லை. இளம்பருவந்தொடங்கியே ஆண்டவர் அவருக்கு மோயீசனுடைய ஞானத்தையும், தாவீதனுடைய நற்குணத்தையும், யூதாவீன் செல்வத்தையும் அளித்திருக்கிருர். இந்நாட்டில் நான்கு திக்குகளில் அவருடைய புகழுங் கீர்த்தியும் பரவியிருக்கிறது. நாட்டின் எத்திக்கிற்போய் விசாரித்தாலும், ஜனங்கள் அவரைப்பற்றி நல்லபிப்பிராயமாகவே பேசுவார்கள். அவருக்கென்ன குறைவு! மகாநுபாவன்! அவருக்குச் "சென்ற விடமெல்லாம் சிறப்பு!" எல்லோருடைய மனதும் இல்லமும் அவருக்கெப்பவுந் திறந்தேயிருக்கும். ஜெபக்கூட்டத்தில் அவர் குரலொலி கேட்டால் எல்லோரும் மிக்கக் கவனவாய் அவர் வாய்மொழியைக்கேட்டு நிற்பர். அவர் சொல்லும் புத்திமதிகளை முத்துக்களிலும் மேலானதாக மதிக்கின்றனர்."

பென்தாவீதைப்பற்றி இவ்வளவு தூரம், புகழ்ந்து பேசினதைக்கேட்டு செபஸ்தியான் வியப்புற்ருன். அவனைக் கேவலம் ஒரு கேடுகெட்ட யூதன் என்று நமது யௌவனவீரன் மதித்திருந்தான். மேலும் தங்களிடம் இருக்கும் பொருட்செல்வத்தையும், கல்விச்செல்வத்தையும் வெளிக்குக்காட்டாமல் மறைப்பது அக்காலத்திய யூதர் வழக்கம். அப்படியிருக்க, ரூபன் சொல்லியதில் அணுவளவும் தப்பறையில்லை என்று செபஸ்தியான் நம்பினுன்.

தனக்கு எப்போதும் துணையாய் நின்ற வாளாயுதம் பக்கத்திலும், பணம் நிரம்பியபைகள் இடையிலும், தன் மனதிற்குகந்த குதிரையொன்று தனக்கடியிலும் இருக்கவே, செபஸ்தியான் தான் நாடிப்போகும் காரியம் அநுகூலமாகும் என்னும் நம்பிக்கையுடன், அந்தக் கிராமத்தைவிட்டுத் தன் பிரயாணத்தை ஆரம்பித்தான்.

தான் நாடிச்செல்லும் இடத்தை நெருங்க நெருங்க, இந்த நம்பிக்கை கொஞ்சங்கொஞ்சமாய்க் குறையத்தொடங்கிற்று. டொலிடோ நகரைச் சமீபிக்கவே அவனுக்குக் கவலையுந் திகிலும் உண்டாயின. ஆனுல் அப்போது கார்சியாஸ் பிரபுவின் மீட்சியை எவ்வாறு சாதிக்கக்கூடும் என்னும் எண்ணமொன்றே அவன் மனதிற் குடிகொண்டிருந்தது. தந்திரத்தால்மட்டுமே காரியத்தைச் சாதிக்கக்கூடும் என்பது திண்ணம். தந்திரச்செய்கையில் தலையிட்டுழைப்பதிலும், தன் வாளையெடுத்து சண்டைசெய்வதே மேலென்று நினைக்கும் நமதிளவல் தந்திரம் என்பதின்னதென்றே யறியாதவன். தன் சமர்த்தையெல்லாங்காட்டிப் போரிடுவதால் தன் நண்பரை மீட்டுவிடலாம் என்று யாரேனும் உறுதிமொழி கொடுப்பரேல், தனக்குத் தகுந்த அலுவல் அதுவேயென்று உடனே அஞ்சாத நெஞ்சத்துடன் வெஞ்சமர் புரிந்திருப்பான்.

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே டொலிடோ நகருக்கருகாமையிலுள்ள ஒரு கிராமத்துக்குவந்து சேர்ந்தான். அந்தச்சமயத்தில் பெருங் காற்றடித்து மழைபெய்யவே, அங்கிருந்த ஒரு சத்திரத்திற்போய்த் தங்கினுன். அங்கே அவனைத் தவிர வேறு பிரயாணிகள் எவருமில்லை. ஆனுல் கொஞ்ச நேரங்கழித்து, துலுக்கப் பட்டாளத்தைச்சேர்ந்த சில போர்வீரர் அவ்விடுதியின் முற்றத்திற்கு வந்தார்கள். செபஸ்தியான் பிரபுவின் வரவை அவர்கள் கவனித்துவிட்டார்களேனும், அதனுல் அவன் பயப்படக் காரணமேயில்லை; ஏனெனில் அச்சமயம் எங்கும் சமாதானம் நிறைந்து, கிறீஸ்துவர்கள் தம் மிஷ்டப்படி எங்கு வேண்டுமேனும் பயமின்றி துலுக்க இராச்சியத்தில் பிரயாணஞ்செய்ய உத்தாவிருந்தது.

வந்த வீரரின் ஈட்டி, கேடயம், கவசம் முதலிய ஆயுதங்களைச் செபஸ்தியான் கவனித்தான்; அவர்கள் ஆல்டிமனுடைய மெய்க்காப்பாளப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரிந்துகொண்டான்.

இந்தப் பட்டாளத்தில் அநேகமாய் ஹங்கேரியரும், ஸ்கலவோனியருமே சேர்ந்திருந்தார்கள். அவர்களில் முன்கூறப்பட்டவர்கள் துலுக்கரால் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள். பின்னையோர் அலெக்சாந்திரியா முதலிய நகரங்களில் அடிமைகளாக வாங்கப்பெற்றவர்கள். அவர்களில் அராபி பாஷை தெரிந்தவர்கள் வெகு சிலரே; ஆனுல் இவ்வறியாமையின் காரணத்தினுல் துலுக்க அரசர்கள் அவர்களை விரும்பினுர்கள். அவ்வரசர்கள் அவர்களிடம் நேசங்காட்டி மற்றப் போர்வீரர்களைவிட அவர்களையே மேலாக நடத்திவந்தார்கள். துலுக்கர்களில் பிரபுக்களும் அரசகுலத்தைச்சேர்ந்தவர்களுமே தளக்கர்த்தர் பதவிக்குரிமையானவர்களென்னும் ஓர் ஒழுங்கிருந்தபோதிலும், இவர்கள் கிறீஸ்வர்களென்றுங் கவனியாமல், இவர்களில் எவரேனும் மிக்கப் பாராக்கிரமசாலியெனப் பேரெடுத்தால், அவனைத் தளக்கர்த்தனுக்குவது வழக்கம்.

சத்திரத்துக்கு வந்த போர்வீரரின் தலைவன் காம்பீரப்பார்வையும் நடுவயதுமுடையவனுன ஒரு கிறீஸ்துவன். அவன் செபஸ்தியான் பிரபுவை நெருங்கி இரண்டொரு வார்த்தைகள் பேசவே, அவனுக்கு வாலிபன்மீது ஒருவித அபிமானமுண்டாகி, தன் படையில் அவனைச் சேரும்படித் தூண்டினுன். ஆல்டீமனிடம் அலுவல் செய்வதால் வருமானம், பெருமை முதலியன கிடைப்பதுடன், சகசீவியாகவுங் காலங்கழிக்கலாமென்றெடுத்துக்காட்டினுன். இந்த வார்த்தைகளால் சாதாரணமாய் வாலிபர்கள் மயங்கிவிடுவது சகஜமல்லவா? நமது வாலிபனுக்கோ இந்த வார்த்தைகளின்படி நடப்பதால், தான் கோரிவந்த காரியம் நிறைவேறுவதற்கான வழி ஏற்பட்டதாகக் காணப்பட்டது. அன்னியர்களை வெகு ஜாக்கிரதையாய்க் கவனித்துவரும் ஆல்டீமனுக்குச் சந்தேகமுண்டாக்காமலே, டொலிடோ நகருக்குள் தான் நுழைய வழி கிடைத்ததே என்று நமதிளவல் சந்தோஷப்பட்டான். இதனுல்தான் சுலபமாய் கார்சியாஸ் பிரபுவைப் பார்க்கக்கூடுமென்று நினைத்தான்; ஏனெனில் மெய்க்காப்பாளர் படையைச்சேர்ந்தவர்களே டொலிடோ நகரின் சிறைக்காவலர் என்று அவனுக்குத் தெரியும்.

(இன்னும் வரும்)

ச. செல்வன்.

உன் பெரியோர்கள் சுவாமிக்குப் பதிலாளிகளென்று எண்ணி அவர்களுக்கு நுணுக்கமாய்க் கீழ்ப்படிவாயாக.

—(அர்ச். கிகோரியார்.(

A SHORT SKETCH OF THE LIFE OF FR. BESCHI.

சங். வீரமாமுனிவருடைய சரித்திரச் சுருக்கம்.

1-ம் பிரிவு.

சுமார் 200 வருஷங்களுக்கு முன் நமது தேசத்தில் சத்திய வேதத்தைப் போதித்துச் சிறந்த கிரந்தங்களை உண்டுபண்ணினவரான சங். வீரமாமுனிவருடைய சரிதையைச் சகலரும் சந்துஷ்டியுடன் வாசிப்பார்களென்கிற கருத்தோடு இது பிரசுரிக்கப்படுகிறது.

பெஸ்கியென்னும் பாஷைப் பெயரைக் கொண்ட வீரமாமுனிவர் இத்தாலியா தேசத்தில் சிறந்த கோத்திரத்தாரும் பிரபுப்பட்டம் வகித்தவர்களுமான தாய் தந்தையரிடத்தினின்று 1680-ம் வருஷத்தில் உதித்தார். இவர் பிறந்த அன்றே இவருக்கு ஞானதீட்சை கொடுக்கப்பெற்று, Constant Joseph Beschi என்னும் நாமதேயம் சூட்டப்பெற்றார்.

இவர் இளம்பிராயத்தில் கல்விகற்கத் தொடங்கி, இவருக்குண்டாயிருந்த புத்திக்கூர்மையால் சாஸ்திரங்களை எளிதில் கற்று தமது 18-ம் பிராயத்தில் சேசு சபையில் உட்பட்டு, மூன்று வருஷகாலம் நவசந்நியாசத்தில் செலவு செய்தபின், கல்விச்சாலையில் சிறு பிள்ளைகளுக்கு ஊக்கத்துடன் கல்விப்பயிற்றிவந்தார். மறு மூன்று வருஷம் உயர்தரப் படிப்புகளை கற்பித்து, தாம் தேவசாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்தபிறகு, தமது 30-ம் பிராயத்தில் குருப்பட்டம் பெறப் பாக்கியம்பெற்றார். இதற்குப்பின் வீரமாமுனிவர், அந்நிய நாடுகளுக்குச்சென்று வேதம் போதிக்க அபிலாஷைகொண்டு, சிரேஷ்டருடைய அனுமதிபெற்று அதற்காக முஸ்திப்பு செய்தார்.

மதுரை மிஷனை 1606-ம் வருஷம் ஸ்தாபித்த De Nobili என்னும் தத்துவபோதகர் சில சேசுசபைக் குருக்களுடன் மதுரை நாட்டில் வேதம் போதித்துவந்தார். 1704-ம் வருஷம் கர்நாடக நாட்டிலும் மதுரை நாட்டிலும் உண்டாயிருந்த சில சங்கடங்களை நிவர்த்திக்கும்பொருட்டு, பிரான்சிஸ் லேயினெஸ் சுவாமியாரும், பூஷே சுவாமியாரும் உரோமைக்குச் சென்றிருந்தார்கள். வீரமாமுனிவர் இவ்விரு குருக்களுடன் மதுரை மிஷன் விஷயங்களைப்பற்றி அடிக்கடி சம்பாஷித்துவந்தபடியால் அந்நாட்டுக்குப்போய் வேதம் போதிக்க அவருக்கு உற்சாகமுண்டானது. தமது கருத்தை சிரேஷ்டருக்குத் தெரியப்படுத்தி அவருடைய அனுமதி பெற்றுக் கப்பலேறி 1710-ம் ஆண்டில் கோவைப்பட்டணத்தில் கரைபிடித்தார். அவ்விடத்தில் சில காலந் தங்கி அங்கிருந்து கப்பல்மார்க்கமாகவும் கால்நடையாகவும் பிரயாணஞ்செய்து சேசுசபை சிரேஷ்டரிருந்த மலையாள தேசம்போய்ச் சேர்ந்தார். அக்காலத்தில் கொச்சியிலிருந்த பெரிய சிரேஷ்டர் அவ்விடத்திலிருந்து டச்சுக்காரரால் துரத்தப்பட்டபடியால், அதைவிட்டு பிள்ளைத்தோப்பில் வசித்துவந்தார். அவ்வூர் சாணார் சேசு சபையாரின் மடத்தைச் சுட்டெரித்துப்போடவே பெரிய சிரேஷ்டர் மணப்பாட்டுக்குப் போகும்படி நேரிட்டது. வீரமாமுனிவர் தமிழ் படிக்கும்படி மணப்பாட்டுக்குப் போக உத்தரவுபெற்றார். இவர் மேமீ 8உ தமது பங்குக்குப் போய்ச்சேர்ந்து, இதுவரையில் தரித்திருந்த கருப்பு வஸ்திரத்துக்குப்பதிலாக, அக்காலத்து வழக்கப்படி காவி வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, மிகவும் ஊக்கத்துடன் தமிழ்ப் பாஷையைக் கற்கத் தொடங்கினார்.

வீரமாமுனிவர் தமது பங்கில் போய்ச் சேர்ந்தபின் தேவ தோத்திரத்துக்காகவும் ஆத்துமாக்களுடைய ஈடேற்றத்துக்காகவும் மரணபரியந்தம் உழைக்கத் தீர்மானித்தார். மேலும் இந்தப் பரிசுத்த வேலையில் அவரிருதயத்தில் இளம்பிய சந்தோஷ மகிழ்ச்சியை அடக்கக்கூடாதவராய், உரோமை அதிசிரேஷ்டருக்குக் கடிதமெழுதி, தம்மை இத்தேசத்துக்கு அனுப்பினதற்காக வந்தனோபசாரம் கூறி, நாகப் பேயை அடக்கி ஒடுக்கி அதன்மேல் வெற்றிபெற்ற அதிதூதரான அர்ச். மிக்கேல் சம்மனசின் திருநாளன்று தமது பங்கு விசாரணையில் சேர்ந்ததாகவும், இத்தேசம் தமக்குப் பிடிபட்டு, கடந்த ஆறுமாதகாலமாய்ச் சுகக்ஷேமமாயிருப்பதாகவும் அறிவித்து, சர்வேசுரனுடைய அதிமகிமைக்காகவும், மனிதருடைய ஆத்தும இரட்சண்யத்துக்

காக்வும் மரணபரியந்தம் உழைத்துவரத் தமக்காகச் சர்வேசுரனைப் பார்த்து மன்ருடும்படிக் கேட்டுக்கொண்டார்.

2-ம் பிரிவு.

வீரமாமுனிவர் தமிழ்ப்பாஷையை எவ்வளவு ஊக்கத்தோடு கற்று விருத்தியடைந்தாரெனில் அப்பாஷையை அவர் இலக்கணத்தோடும், வாய்ச்சாலகத்தோடும் பேசுவதையும், சீர்திருத்தமாய் எழுதுவதையுங்கண்ட இந்து சாஸ்திரிகள் அதிசய பிரமைகொண்டார்கள்.

இந்து சந்நியாசிகளைப்போல் வீரமாமுனிவர் இறைச்சி, மச்சம் முதலியவைகளைப் பட்சணியாமல், சாதம், பால், தயிர், மாக்கறி முதலிய பதார்த்தங்களையே ஒரு நாளைக்கு ஒருவிசைமாத்திரம் சொற்பமாய்ப் புசிப்பார். தமிழரான இரு சுயம்பாகிகள் அவருக்குச் சமையல் வேலை செய்துவந்தார்கள்.

சகல ஜாதி ஜனங்களுடன் சுலபமாய் சம்பாஷித்துப் புழங்கும்படி உடைநடை பாஷைகளில் இந்துக்களைக் கண்டுபாவித்தார். வீட்டிலிருக்கும்போது காவி சோமனும் அங்கவஸ்திரமுந் தரித்துக்கொண்டு, நெற்றியில் சந்தனப்பொட்டிட்டு தலையில் படிபோன்ற சிகப்புக் குல்லா போட்டுக்கொள்வார். வெளியே புறப்படும்போது, நெடுங் காவி அங்கி தரித்து சிகப்பு நடுக்கச்சை கட்டிக்கொள்வார். சிற்சில சமயங்களில் காவிப்பாகையைத் தரித்துக்கொண்டு கையில் காவி உறுமால் பிடிப்பார். காதில் முத்துக் கடுக்கனும், விரலில் பொன் மோதிரமும், காலில் பாதரட்சையுந் தரித்துக் கையில் ஊன்றுகோலும் பிடிப்பார்.

* வீரமாமுனிவர் வெளியில் புறப்படும்போது பல்லக்கிலேறிச்செல்வார். பல்லக்கின் இருபக்கத்திலும் இருவர் நின்று விசிறிக்கொண்டு போவார்கள். இன்னொருவன் ஒரு சிகப்புப் பட்டுக்குட்டையை விரித்துப் பிடித்துக்கொண்டு பல்லக்குக்கு முன்நடக்க, வேறிருவர் மயில் தோகையை கையில் பிடித்துக்கொண்டு செல்லுவார்கள். வீரமாமுனிவர் பல்லக்கினின்று இறங்கவே தாழ விரிக்கப்படும் புலித்தோலின்மேல் உட்காருவார்.

வீரமாமுனிவர் ஏழை எளியவர்களுக்குத் தாராளமாய் தர்மந்தந்து கோவில்களை நேர்த்தியாய்க் கட்டுவித்து அலங்கரிப்பார். வாலிபருக்குப் பல பாஷைகளை மகா ஊக்கத்துடன் கற்பித்து அவர்களுக்கு வேத காரியங்களைப் படிப்பிப்பார். இவர் கோனுங்குப்பதில் ஒரு கோவில் கட்டி முடித்தார். இவருடைய வேண்டுகோளின் மேல், மயிலை மேற்றிராணியார் மணில்லாவிலிருந்து ஒரு தேவமாதா சுரூபம் தருவித்து அவருக்கு அனுப்பிவைத்தார். இதற்கு அவர் பெரியநாயகியம்மாளென்று நாமஞ்சூட்டி அக்கோவிலில் ஸ்தாபித்து நவநாள் பிரார்த்தனையுடன் ஒரு பெருந் திருவிழாவைக் கொண்டாடினர். அதற்கென்று இவர் கட்டிய 15 பாடல்கள் ஷை நவநாளில் பாடப்பட்டன. அந்தத் திருநாள் இந்நாள்வரைக்கும் மகா ஆரபாரத்துடன் கொண்டாடப்பட்டு, வீரமாமுனிவர் செய்து பாடிய பாடல்கள் பாடப்பட்டுவருகின்றன. இத்திருநாளுக்காக ஏராளமான திருயாத்திரைக்காரர் அவ்விடஞ்சென்று அக்கோவிலைச் சந்தித்துவருகிருர்கள்.

வீரமாமுனிவர் திருக்காவலூர் என்னும் ஊரில் வேறொரு கோவிலை தேவமாதா பெயரால் கட்டியெழுப்பி அதற்கு அடைக்கலமாதா கோவில் என்று பெயரிட்டார்.

வீரமாமுனிவர் சாஸ்திரங்களையுங் கலைக்கியானங்களையும் எவ்வளவுக்கு தீர்க்கமாய்க் கற்றிருந்தாரோ அவ்வளவுக்கு அதிகமாய் தேவ பக்தியில் மிகுந்து சகல புண்ணியங்களையும் உத்தமமேரையாய் அனுஷ்டித்து சகலருக்கும் ஞானக் கண்ணுடியாய்ப் பிரகாசித்தார்.

வீரமாமுனிவர் இந்து சாஸ்திரிகளுடன் புழங்கி அவர்களுடன் வேததர்க்கஞ் செய்வதற்கும், அவர்களுடைய தப்பறைகளையும் துற்பழக்கங்களையுங் கண்டித்து சத்திய வேதத்தின் உண்மையையும் மகத்துவத்தையும் எடுத்துரைக்கும் பொருட்டும் இந்து சாஸ்திரங்களையும் அவர்களுடைய வேத கிரந்தங்களையும் முற்றும் வாசித்தறிந்தார். இவர் சாஸ்திரிகளோடும் கற்றறிந்தவரோடும் சம்பாஷிக்கையில் அவர்கள் போடும் சிக்கும் காடுமுரடுமான வினுக்களுக்குத் தகுந்த விடை

---

* வீரமாமுனிவர், சந்தா சாய்புக்கு மந்திரியாயிருந்த காலத்தில் இவ்வித வெளிச்சிறப்புடன் பல்லக்கேறிச்சென்ருரென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

பகர்ந்து அவர்களுடைய தப்பறைகளை கண்டிப்பதைக் கண்டவர்கள் அதி ஆச்சரியப்படுவார்கள். ஒரு நாள் கல்விச்செருக்குற்ற இரு பண்டாரங்கள் தங்களைப் பெரும் சாஸ்திரிகளென்று காண்பிக்க வீரமாமுனிவருடன் சயிக்கினைமூலமாய்த் தர்க்கஞ்செய்வதற்குத் துணிந்தார்கள். அவ்விருவரும் இரு கேள்விகளைக் கேட்போம் என்கிற கருத்துடன் நமது இரு விரலைக் காட்டுவோம். அப்போது வீரமாமுனிவரோ, இரு விரலைக்கண்டு நாமிருவர் வந்திருக்கிறோமென்று அருத்தம் கொள்வார். அப்போது நமக்கு ஜெயமுண்டாகுமென்று இரகசியமாய்ப் பேசிக்கொண்டு, வேதகுருவிடஞ்சென்று இரு விரலை நீட்டிக்காட்டினார்கள். இதைக்கண்ட வீரமாமுனிவர் தமக்குள் சற்று யோசித்துப்பார்த்து, ஒன்றுக்கொன்று விருத்த காரியமாகிற பாவபுண்ணியம், நன்மை தின்மை, மோட்சம் நரகம், வானம் பூமி, சூரியன்ன் சந்திரன், துக்கம் சந்தோஷம் முதலியவைகளை நினைவுகூர்ந்து ஒரு விரலை நீட்டிக்காட்டி இரு கரங்களையும் தட்டினார். இதைக்கண்ட பண்டாரங்கள் அதிசயித்து வாய்திறந்து, ஒரு விரலை நீட்டியதற்கு அர்த்தமேதென்று வினவினார்கள். அதற்கு வீரமாமுனிவர் பரலோக பூலோக முதலிய சகலத்தையும் படைத்த சர்வேசுவரன் ஒருவரே யொழிய இருவரல்லவென்னும் அர்த்தமாக ஒரு விரலைக் காட்டினேனென்று மொழிந்ததை பண்டாரங்கள் கேட்டுத் தாங்கள் தோற்றுப்போனதாக அங்கிகரித்து வெட்கத்துடன் அவ்விடத்தினின்று அகன்றனர்.

வேறொரு நாள் இந்து வேதசாஸ்திரத்தில் தேர்ந்தவர்களான 9 சடைபண்டாரங்கள் வீரமாமுனிவருடன் வேத தர்க்கஞ்செய்ய அவரிடம் அணுகி, தாங்கள் அவருடன் வேதத் தர்க்கம் செய்யவேண்டுமென்றும், தர்க்கத்தில் தோல்வியடைந்தவர்கள் வெற்றியடைந்தவர்கள் சொற்படி நடக்கவேண்டுமென்றும் கூறினார்கள். வீரமாமுனிவரும் அதற்கு சம்மதித்தார். ஒரு மாதம் வரை தர்க்கம் நடந்தேறிற்று. பண்டாரங்களோ தங்களுக்கே ஜெயமென்று நிச்சயித்து, தந்திரோபாயமாயும் வாய்ச்சாலகமாயும் போட்ட கேள்விகளை இவர் எவ்வளவோ சுலபமாயும் தெளிவாயும் வியாக்கியானித்து அவர்களுடைய கொள்கைகள் சுத்த அபத்தமென்று விளக்கி, சத்திய வேதத்தின் உண்மையைத் தெளிவாய் எடுத்துக்காட்டினார். அதனால், பண்டாரங்கள் தாங்கள் தோல்வியடைந்ததாக ஒத்துக்கொண்டு, அவர்களில் 6 பேர் வேதசத்தியங்களை அறிந்து ஞானதீட்சை பெற்றார்கள். வேறு மூவர் தங்கள் அபஜெயத்தின் குறிப்பாக தங்களுடைய நீண்ட சடைகளை அறுத்து குருவானவருடைய பாதத்தில் பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்தார்கள். வீரமாமுனிவர் அந்தச் சடைமயிரைப் பந்தாகத் திரட்டி திருக்காவலூர் கோவிலில் பத்திரப்படுத்தும்படி கற்பித்தார்.

வீரமாமுனிவர் பற்பல நாடுகளுக்குச் சென்று வேதம் போதிக்கையில் வைத்தீஸ்வரன் கோவில் என்னும் ஊருக்குப் போய்ச்சேர்ந்தார். சாயந்திர வேளையில் இவர் அதைச் சுற்றிப்பார்க்கப் போனபோது அவ்வூர் கோவிலில் உற்சவங் கொண்டாடும்படி திரளான ஜனங்கள் அங்கு கூடியிருப்பதைக்கண்டு, இந்தக் கோவிலின் பெயரென்னவென்று வினவினார். அதற்கு அவர்கள் இது வினைதீர்த்தான் கோவில், இக்கோவிலுக்கு திருயாத்திரையாய் வரும் குருடு, செவிடு, முடம், சப்பாணி முதலிய பிணியாளிகள் சுகமடைகிறார்கள் என்றார்கள். இதை அவர் கேட்டு, பின்வரும் வெண்பாவைப் பாடினார்.

வாதக்காலாந் தமக்கு மைத்துனற்கு நீரிழிவாம்
போதப் பெருவயிறாம் புத்திரற்கு—மாதரையில்
வந்தவினை தீர்க்க மருந்தறியான் வேளூரான்
எந்தவினை தீர்த்தானிவன்.

(இதன் பொருள்) வேளூரானென்று சொல்லப்படும் இந்த வினைதீர்த்தான் என்னுங் கடவுள் தனக்குண்டாயிருந்த வாதரோகத்தையும், தன் மைத்துனனான விஷ்ணுவுக்கு உண்டாயிருந்த நீர் வியாதியையும், தன் குமாரனான கணேசனுக்கு இருந்த அபரிமிதமான வயிற்றின் வியாதியையும் குணப்படுத்தக்கூடாமல்போனவன், உலகிலுள்ள இத்தனை வியாதிக்காரரை எப்படி சொஸ்தப்படுத்துவான்.

இந்தப் பாடலைக்கேட்ட அந்த ஜனங்கள், இவர் தங்கள் வேத புஸ்தகங்களை எவ்வளவு நன்றாய் வாசித்திருக்கிறாரென்று அதிசயித்தார்கள்.

(தொடரும்.)

J. M.

ஒருநாளைக் கொருவிசையாகிலுந் தேவநற்கருணையைச் சந்திப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

நிகழ்கால சத்தியம்.

அன்பார்ந்த நல்லாயன் சந்தா நேயர்களே!

கெட்ட புத்தகங்களைக் கையாடுவதால் நேருங் கெடுதியை அறியாதார் சிலரே. அர்ச். இராயப்பரின் பதிலாளியும் திவ்ய கர்த்தரின் பிரதிநிதியுமாகப் பாக்கியம்பெற்ற 10-ம் பத்திநாதராகிய பரிசுத்த பிதாவும் மற்றும் அநேகாநேக பாப்புமார்களும் இக்கொடிய விஷத்தின் கொடுமையை எவ்வளவோ சவிஸ்தாரமாக எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். சத்திய வேத விஷயமாய் எழுதப்பட்ட புஸ்தகங்களேயானாலும் மேற்றிராணிமார்களின் அனுமதியின்றி அவற்றைப் பிரசுரஞ் செய்யலாகாதென்றும், விசுவாசிகள் அவைகளை வாசிக்கவும், கையால் முதலாய்த் தொடவுமாகாதென்றும் நமது நேச பத்திராதிபர்களே பன்முறைகளிலும் எச்சரித்துள்ளதை நேயர்கள் அறிவார்கள். இவ்விதமிருக்க, சென்ற சில வாரங்களுக்கு முன் சில கிறீஸ்துவ கத்தோலிக்கு நேயர்கள் மிக மனச்சோர்வுடன் ஓர் பத்திரிகையை என்னிடம் கொடுத்தார்கள். ஆ! என்ன பரிதாபம். இப்பாதகண்டத்தின் ஒரு கோடிமுதல் மறுகோடி முனைவரையில் உள்ள ஒவ்வொரு நேசமக்களின் மனையையும் தேடிப்போய் தேவாசீரைப் பொழிந்துவரும் நம் நேச "நல்லாய"னையும் பரிசுத்த திருச்சபையையும் அப்பத்திரிகையில் அளவில்லாதவிதமாய் தூஷித்திருப்பதைக்கண்டு என் மனம் ஆறாத்துயரடைந்தது. நிற்க, சத்திய திருச்சபையின் வைரத் தூண்களாக விளங்கி நின்ற கணக்கற்ற வேதபாரகரும் குருப்பிரசாதிகளும் திருச்சபை ஆரம்பமுதல் நாளதுவரையில் அணுவேனும் பிசகாது அனுசரித்துவரும் அனுஷ்டான முறைகளைத் தூஷணிக்க ஏற்பட்ட பதிதர்கள் திருச்சபைக்குப் புறம்பாக்கப் பட்டிருப்பதும் அப்பதிதத் தப்பறைகள் மறுக்கப்பட்டிருப்பதும் உலகப்பிரசித்தமே. இங்ஙனமிருக்க, இப்போது ஓர் நூதன வேதம் முளைத்திருக்கிறது. இவர்கள் கொள்கையைக் கவனிக்குமிடத்து இவர்கள் வேதம் போதிக்க வந்தவர்களல்ல, சத்திய திருச்சபை ஆதிதொட்டு வழுவாவரத்துடன் போதிக்கும் வேதப்பிரமாணங்களில் தப்பறை கண்டுபிடித்துத் தூஷணிக்கக் கங்கணங்கட்டிப் புறப்பட்டவர்களென்றே புலப்படும். தங்களரிய ஞானத்தைப் புகட்ட, பெங்களூரில் ஓர் அச்சியந்திரசாலை யேற்படுத்தி வருஷம் 4 பத்திரிகைகள் பிரசுரஞ்செய்கிறார்கள். இதன் பேர்தான் "நிகழ்கால சத்தியம்." சத்தியமானது எக்காலத்தும் சத்தியமாகவே யிருக்கவேண்டுவது. அதற்கு இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமென்பதில்லை. முக்காலத்தும் ஒரே சீராயிருக்கவேண்டுவது. அதற்குக் கால வேறுபாட்டைச் சங்கற்பித்திருப்பதானது சத்தியத்தைப் புறட்ட ஏற்பட்ட எத்தனமென்று எண்ணுவதற்கு இடங்கொடுக்கிறது. இதற்கொப்ப இந்தப் பத்திரிகையின்வாயிலாய் அவர்கள் வெளியிடும் அரிய ஞானத்திற்கு அளவேயில்லை. சுவிசேஷம் இவர்களுக்குச் சுண்டாங்கிதான். ஆகவே குரங்குகையில் பூமாலையகப்பட்டதுபோல், சுவிசேஷத்தின் அர்ச். அருளப்பர் காக்ஷியாகமத்தை வியாக்கியானஞ்செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பேசும் விதத்தைப்பார்த்தால், அர்ச். அருளப்பருக்கு 3 நாளைக்கு முன்னதாகவே வானமண்டலம்போய்க் காத்திருந்து சகல காக்ஷிகளையும் கண்கூடாய்க் கண்டுவந்தவர்கள் போல் பேசுகிறார்கள். அவர்கள் வியாக்கியானங்களோ வெண்ணைமேல்வைத்த வெட்டுக்கத்திகள் தாம். ஒரே வார்த்தையில் "வெறிகொண்ட மர்க்கடம் பேய்கொண்டு கள்ளுண்டு வெங்கஞ்சொரிப் புதரிலே, வீழ்ந்து தேள்கொட்டிடச் சன்மார்க்க மெள்ளளவு மேவுமோ மேவாதுபோல், குரைக்கின்ற புத்தியாயதி லற்ப சாதியாய் கூடுமே யிளமையுண்டாய்க் கொஞ்சமா மதிகாரமுங் கிடைத்தால் இந்தக் குவலயந்தனிலவர்க்கு, நிறைகின்ற புத்தியும் சீலமும் ஞானமும் நிதானமும் பெரியோர்கள்மேல் நேசமும் பாசமும் ஈகையும் இவையெலாம் நினைவிலும் வாராது கண்டாய்......" எனப் பாடியது இவர்களுக்கே பொருந்துமென்றாலும் பொய்யாகாது. தங்களது வசன முடிவுகளில் ரோமானரையே சுட்டி, "துவக்கிவிட்டார்கள்," "மாற்றிவிட்டார்கள்," "செய்துவைத்தார்கள்" என இறந்த காலத்தையே காட்டிப் பேசுகிறார்கள். நிகழ்கால சத்தியத்தைப் போதிக்கவந்த நிபுணர்களுக்கு இறந்த காலப்பேச்சு என்னத்திற்கு? இது இருக்கட்டும்.

'ஆடமாட்டாத தாசி கூடம் கோணல்' என்றாற்போல் தான் கெட்டேன் என்று சொல்ல வெட்கங்கொண்டு, வேதமணம் முதலா யறியாத இவர்கள் வேத வியாக்கியானஞ்செய்ய ஏற்பட்டு, பரிசுத்த பாப்புமார்கள் வேதபாரகர்கள் வேதவிற்பன்னர்கள், குருக்கள், மேற்றிராணியர்கள், கன்னியர்கள் முதலியோரை அவமதிப்பாய்ப் பேசுவதுமல்லாமல் திவ்யபலிபூசை, தேவநற்கருணைமுதலியவைமட்டில் அபாரமான தேவதூஷணங்களையுங் கக்குகிறார்கள். "நீரளவேயாகுமாம் நீராம்பல் தான்கற்ற, நூலளவே யாகுமாம் நுண்ணறிவு." தங்களுக்கு மீசுரமான படிப்

பாளிகள் இப்பிராந்தியத்தில் இதுகாறும் இருந்த தில்லையென்றும், இனி இருக்கப்போகிறதில்லை யென்றும் நினைக்கிறார்கள்போலும். இவர்களது பரம போதகம் வீணர்களுக்கேயன்றி விவேகிக ளுக்கற்பமும் பொருந்துவதல்ல. ஓ! திருச்சபை யின் செல்வமக்களே! அர்ச். அருளப்பர்தானே இவ்விஷயமாய்ச் சொல்லுவதைக் கேளுங்கள். "ஒருவன் உங்களிடத்தில் கிறீஸ்துவின் உபதே சத்திற்கு மாறானதைக் கொண்டுவருவானாகில் உங்கள் வீட்டில் அவனுக்கு இடம் கொடுக்கவும், வாழ்கவென்று சொல்லவுங்கூடாது. வாழ்க வென்கிறவன் அக்கிரமங்களுக்குப் பங்காளியாகி றான்" என்பதே. ஆகையாலல்லவா வேதத் தைக் கேளாத அஞ்ஞானியோடு உறவாடினாலும் வேதத்தைக் கெடுக்கிற பதிதனோடு உறவாட லாகாதென்று திருச்சபை எக்காலத்திலும் பதி தரை விலக்கிவைத்திருக்கிறது? அப்படியிருக்க, அன்னாரோடு உறவாடவாவது, அவர்கள் பத்திரி கைகளைக் கையாடவாவது விநோதப்பிரியமாய் வாசிக்கவாவது தலைப்படுவது மிக்க ஆபத்துக்குரி யதும், ஞானக்கேடு விளைவிப்பதும் நல்லோர்க ளால் துவேஷித்து வெறுக்கத்தக்கதும் என்று அறியக்கடவோமாக.

T. Ross M. S.,
Oorgaum.

சேசு சபை சங். ஜோசேப் பாஸ்க் சுவாமிகளின் தேகவியோக துக்கபிரலாபம்.

அன்பே உருவாகக்கொண்ட இவ்வுத்தம தேசிகர் நிகழ் வருடம் ஆகஸ்டுமீ 10உ செம்பக னூர் மலையில் மரணமான செய்தியை அறிந்து மிகவும் பிரலாபிக்கின்றேன். அன்பு, தயை, பொறை, ஆற்றலாதிய உயர்குணங்கள் அமையப் பெற்ற இவ்வேதியர் எங்களூரில் (ஆலந்தலை) விசாரணைக் குருவாயிருந்தகாலத்தில் வைதீக, லௌகீக விஷயங்களில் விசேஷ உழைப்பாளி யாயிருந்தார். இவ்வூருக்கு இவரே குருவாக வும், குடும்பத் தலைவனாகவும், வைத்தியனாகவும், நியாயாதிபதியாகவும், காவலனாகவும், சீர்திருத் தத் தலைவனாகவும் சுருக்கிச் சொல்லில் தம் ஞான மக்களின் க்ஷேமலாபங்களில் எல்லாத் திக்கும் எல்லாமுமாகச் சிறந்து விளங்கினார்.

1918-ம் வருடம் இவ்வூரில் விஷபேதி யென்னும் கொடிய நோய் பரவி அநேக உயிர்க ளைச் சூறையாடினகாலத்தில் சுவாமிகளின் அரிய பிரயாசையை என்னென்று சொல்ல! இரவோ பகலோ, மழையோ வெயிலோ, குளிரோ பனியோவென்று கவனியாமல் வீதி வீதியாய் அலைந்து ஒவ்வொரு வீட்டுக்கும்போய் அங்குள்ள விசேஷங்களை அறிந்து, வியாதியஸ் தரைக்கண்டால் (ஆ! என்ன அன்பு!! என்ன சிநேகம்!!!) அன்னவர்களுக்கு வைத்தியஞ்செய் தும் அதற்கடுத்த பணிவிடைகளைப் புரிந்தும், தேவத்திரவிய அநுமானங்களை நிறைவேற்றி வரவே, அக்கொடிய நோயால் தாமும் பீடிக்கப் பட்டு உபத்திரவப்பட்டதை ஓர் பொருட்டா யெண்ணாமல், அந்தோ! தம் ஞான மக்கள்மீது கொண்ட நேசப்பெருக்கத்தால் செய்துவந்த நன்மைகளை நினைக்கும்பொழுது இவ்வரிய தந் தைக்குச் செய்யும் கைம்மாறு என்னவென்றால்

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றலரிது"

என்னும் ஆன்றோர் வாக்கை பன்முறை சொல் லிப் புகழ்வதே கடமையாகும். 1919-ம் வருட ஆரம்பத்தில் இவ்வூர் பங்கு விசாரணையைவிட்டு சுவாமிகள் வேறே ஊருக்கு மாற்றப்பட்டபோது இவ்வுத்தம தந்தையின் பிரிவாற்றாமையைச் சகி யாத இவ்வூர் கத்தோலிக்கரில் அநேகர் கண்ணீர் விட்டழுதார்களென்றால், இவரின் மரணத்தை யறிந்த இவர்களின் மனத்துயரம் எவ்வாறிருக் குமென்று இதை வாசிப்போர் அறிந்துகொள்ள லாம்.

இதைக் கண்ணுறும் கத்தோலிக்கு சகோ தர சகோதரிகளே! சர்வேஸ்வரனுடைய திராட் சத்தோட்டத்தில் உழைத்துவந்த இவ்வுத்தம தந்தையின் ஆத்துமத்துக்கு நித்திய முத்தியை யளிக்குமாறு திரியேக கடவுளைப் பிரார்த்திக் கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். *R. I. P.*

இங்ஙனம்,
ஞானத்தந்தையை இழந்து பிரலாபிக்கும்
கொழும்பு, 5—9—20. } V. C. லூக்காஸ் வில்லவாயன்,
ஆலந்தலை.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

கன்னாட்டுக் கோமகன் விஜயம்.—கன்னாட்டுக் கோமகன் சென்னைக்கு அடுத்த ஜனவரிமீ 10-ந் தேதி வந்திறங்கி 14-ந் தேதி வரையில் தாமதித்திருந்து 15-ந் தேதி பிரயாணப்படுவாரெனத் தெரிகிறது.

இராமநாதபுரம் கலெக்டர்.—ஆனரபில் திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள், "விவசாய டைரெக்டர்" உத்தியோகத்தினின்று இராமநாதபுரம் ஜில்லா கலெக்டராக மாற்றப்பட்டிருக்கிறார் கள்.

பாப்பானவரின் ஸ்தானாதிபதி.—இது வரையில் இந்தியாவும் இலங்கையுமே கிழக்கு இந்திய ஸ்தானாதிபத்தியத்துக்குள்ளாயிருந்தன. இனிமேல், பர்மாவும் அதன் அதிகார வரம்புக்குள்ளடங்கவேண்டுமென்று அர்ச். பாப்பானவர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

தொத்துவியாதி.—போலந்திலும் கலீஷியாவிலும் புதிதாக ஸன்னிபாத ஜுரத்தைப்போன்ற ஓர் தொத்துவியாதி பாவி வருகிறது. இதை ஆரம்பத்திலேயே ஒழித்துவிடாதவரையில் எல்லாத் தேசத்திலும் பாவிவிடக் கூடுமாகையால், சீக்கிரத்தில் அதற்கு அனுகுணமான காரியங்களைச் செய்யவேண்டியதற்காக அவசியமாயிருக்கும் 1 கோடி பவுன் எல்லா கவர்ன்மெண்டாரும் சேர்ந்து சர்வதேச சங்கத்திற்கு உதவ வேண்டுமென்று மிஸ்டர் பால்போர் ஒரு விண்ணப்பத்தை வெளியிட்டிருக்கிறார்.

அபூர்வ தேகபலம்.—மிகவும் தேக பலங்கொண்ட மிஸ்டர் கே. லக்ஷ்மோஜி யென்ற சிறுவர் சமீபத்தில் சென்னையில் யாவரும் பிரமிக்கும்வண்ணம் தனது பலத்தை வெளிக்காட்டினார். முதலில் அவர் தனது சதைகளின் பருமனை நன்கு காட்டினார். அதன்பிறகு 20 குதிரை ஓட்டமுள்ள மோடார் வண்டியை நிறுத்தினார். தனது பற்களினாலேயே 230 பவுன் எடையுள்ள பாரத்தைத் தூக்கினார். பல ஜனங்கள் ஏறியுள்ள வண்டி ஒன்றையும் தன்மேல் ஏற்றிக்கொண்டார். கடைசியாக 2 இஞ்சு கனமும் 3 இஞ்சு அகலமுமுள்ள இரும்புப்பட்டை ஒன்றையும் வளைத்தார்.

ஊமையர் அந்தகர்கள் தொழிற்சாலை.—மைசூரில், ஊமைகளுக்கும், குருடர்களுக்கும் அநாதசாலையொன்று ஏற்படுத்தப்பட்டு வெகு வெற்றியுடன் நடைபெற்று வருகிறது. அதில் தற்போது 43 ஆண்கள், 4 பெண்கள் உள்பட 22 ஊமைகளும், 25 குருடர்களும் ஆதரிக்கப்பட்டுவருகிறார்கள். பிரம்பு சாமான்கள் செய்யவும், வஸ்திரங்கள் நெசியவும் கற்பிக்கப்படுகிறார்கள். இவர்கள் செய்யும் சாமான்கள் நல்லதாயும், பிரயோஜனமுள்ளதாயுமிருப்பதால், தீவிரத்தில் விலையாய்விடுகிறதாம்.

அபூர்வ மோட்டார்வண்டி.—சென்னையில் தற்போது நடத்திவரும் பட்டவர்த்தன சர்க்கசில் ஒரு நூதனவிதமான மோட்டார் வண்டி ஓட்டிக் காண்பிக்கப்படுகின்றது. அது ஓடும்போது ஓட்டுகிறவன் இஷ்டப்படி பூமி மட்டத்துக்கு மேலே எழும்பித் தாண்டிக் குதித்து ஓடுகிறது. காட்டுமார்க்கமாகப் பிரயாணஞ்செய்கையில் வழியில் குறுக்கிடும் ஆற்றையோ, கால்வாயையோ, கடப்பதற்கு மெத்த சாதகமான வாகனம். அது ஓடிக்கொண்டிருக்கும்போது தாண்டிக் குதித்தோடுங் காட்சி விநோதமாயிருக்கிறது.

சங். பெட்ராம் சுவாமிகள்.—இந்த சுவாமிகளுக்குச் சென்னை, சர்வகலாசாலையாரால் "எல். எல். டி." என்னும் கௌரவ வித்தியா பட்டம் கொடுக்கப்பட்டதென்று ஓர் தமிழ் பத்திரிகையில் கண்ட ஞாபகத்தின்பேரில் அவ்விஷயத்தைச் சென்ற மாத சஞ்சிகையில் குறித்திருந்தோம். அவ்விஷயம் உண்மையல்லவென்று நமக்கு அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு உண்மையல்லாத சங்கதியை நாம் பிரசுரிக்க நேர்ந்ததைப் பற்றி வெகுவாய் வியசனிக்கிறோம்.

அமேரிக்க கோடீஸ்வரர்கள்.—அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் 1907-ம் வருஷத்தில் 6 ஆயிரங் கோடீஸ்வரர்கள் இருந்தார்களாம். இவ்வருஷத்தில் 20 ஆயிரங்கோடீஸ்வரர்கள் இருக்கிறார்களெனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்திலும், ஜப்பானிலும் இம்மாதிரியே ஐஸ்வரியவான்களின் தொகை அதிகரித்திருக்கிறதாகத் தெரிய வருகிறது. இதற்குக் காரணம் ஐரோப்பிய யுத்த சம்பந்தமாய் ஏற்பட்ட வியாபாரமே யென்பதற்குத் தடையில்லை. யுத்தமானது பலரைத் தரித்திரர்களாக்கித் சிலரைத் தனிகராக்கிவிட்டது.

மிக விலை உயர்ந்த புத்தகம்.—எபிரேய பாஷையில் எழுதப்பட்ட சுவிசேஷப் புத்தகம் நமது பரிசுத்த பாப்பானவருடைய வத்திக்கான் மாளிகையிலுள்ள புத்தகசாலையிலிருக்கிறது. இது மெத்த அருமையான புத்தகமாதலால் கி. பி. 1512-ம் வருஷத்திலேயே அதற்கு சமனெடையான பொன் கொடுக்கச் சம்மதித்து, அதை விலைக்குக் கேட்டபொழுது பரிசுத்த தந்தை கொடோமென்று மறுத்துவிட்டனராம். அதின் சமநிறையுள்ள பொன்னின் விலை 20,000 பவுன்

களாகும். அது நடந்து நானூறு வருடங்களாய்விட்டதால் இப்போது அதன் விலை இன்னும் அதிகமாகுமன்றோ?

மரியாயின் மகா சங்கம்.—அடுத்த ஜனவரிமீ சென்னையில் நிகழப்போகும் மரியாயின் மகா சங்க வைபவத்துக்கு விஜயஞ்செய்ய விரும்பும் நண்பர்கள் சிலர் இடவசதி, சாப்பாட்டு வசதி முதலியவைகளைப்பற்றிய விவரங்களை உசாவிக் கடிதம் எழுதியுள்ளார்கள். இவ்விஷயங்கள் அவரவர்கள் அந்தஸ்துக்கும், பழக்கவழக்கங்களுக்கும் தக்கவாறு ஏற்படுத்தப்படவேண்டியிருப்பதால், அவைகளைப்பற்றி ஷெ மரியாயின் சங்கத்து வரவேற்பு, விருந்தோம்பல் கமிட்டியார் ஆலோசனைசெய்துவருகிறார்கள். சாப்பாட்டுக்காக நபருக்கு இவ்வளவென்றுஒவ்வொருவரிடமிருந்தும் வசூல் செய்யப்படும். சாப்பாட்டு விகிதம் மூன்று வகுப்பாய் அதாவது, ஐரோப்பியர் வழக்கப்படி உயர்தர இருக்கை போஜனம் முதலியவை உபயோகிக்க விரும்புபவர்கள் முதல் வகுப்பு; ஐரோப்பிய நடுத்தர இருக்கை போஜனம் வேண்டியவர்கள் 2-வது வகுப்பு; இந்தியர் வழக்கப்படி இருக்கை போஜனம் முதலியவை கோருபவர்கள் 3-வது வகுப்பு; ஆக மூன்று வகுப்பாய் பிரிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விவரங்கள் யாவும் கூடிய சீக்கிரத்தில் இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய இம்மூன்று தேசங்களிலுமுள்ள ஒவ்வொரு பங்கு சுவாமியார்மூலமாய் சகல கிறீஸ்துவர்களுக்கும் அறிவிக்கப்படும்.

இருப்புப்பாதை சௌகரியம்.—மரியாயின் மகா சங்கத்துக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து சென்னைக்கு விஜயஞ்செய்யப்போகிறவர்களின் சௌகரியத்துக்காக, "காங்கிரஸ் ஸ்பெஷல்" என்னும் தனி வண்டிகள், கல்கத்தா, பம்பாய், லாகூர், டில்லி முதலிய முக்கிய நகரங்களிலிருந்து குறித்த காலத்தில் சென்னைக்கு வந்து சேரும்படிச்செய்ய காங்கிரஸ் கமிட்டியார்களுக்கும், ரயில்வே அதிகாரிகளுக்கும் கடிதப் போக்குவருத்து நடப்பதாகத் தெரிகிறது. இதற்கு ரயில்வே அதிகாரிகள் இசைவார்களானால் மரியாயின் பக்தர்களுக்கு மிக்க அனுகூலமாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

ஒரு பிரேரணை.—மரியாயின் மகா சங்கம் நடைபெறப்போகும் தினங்களாகிய, ஜனவரிமீ 13 14, 15-ந் தேதிகளில் கவர்ன்மெண்டு உத்தியோகத்திலிருக்கும் கத்தோலிக்கர்கள் அனைவருக்காக ரஜா கொடுக்கும்படி மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்களுக்கும் மற்ற வர்த்தகசாலைகளிலும் ஷாப்புகளிலும் அலுவல் பார்க்கிறவர்களுக்காக சென்னை வர்த்தக சங்கத்தாருக்கும், வியாபார சங்கத்தாருக்கும் மனுசெய்துகொள்ளவேண்டுமென்றும், சென்னையில் கத்தோலிக்கர்கள் வசிக்கும் இடங்களைச்சார்ந்த ரஸ்தாக்களையும், தெருக்களையும் அந்நாட்களில் சுத்தமாக்கி, காலையிலும் மாலையிலும் தண்ணீர் தெளித்து, துப்புரவாய் வைக்கவேண்டுமென்று சென்னை மியூனிசிபல் கார்பொரேஷன் கமிஷனரைக் கேட்கவேண்டுமென்றும் பிரேரிக்கிறார். இந்த நல்ல பிரேரணையை மரியாயின் சங்கத்து கமிட்டியார் கவனிப்பார்களாக.

குரங்கு சாட்சி சொல்லுதல்.—துருக்கியில் ஒரு சர்க்கஸின் சொந்தக்காரனை அதைச்சேர்ந்த ஒரு ஸ்திரீயும் புருஷனும் கூடிக் கொலைசெய்துவிட்டார்கள். இதை யாருங் கண்கூடாப் பார்த்ததில்லை. அனுமானத்தின்பேரில் ஷெ ஸ்திரி புருஷரிருவரையும் நியாயஸ்தலத்துக்குமுன் விசாரணைக்குக் கொண்டுபோனபோது, அந்தச் சர்க்கசைச் சேர்ந்த "ஸ்காம்ப்" என்னும் குரங்குக்குத் தீனிவைத்துக்கொண்டிருக்கும்போது தான் அக்கொலை நடந்ததென்று விவரந்தெரிய, அவ்விடத்தைப் பரிசோதனை செய்வதற்கு நியாயாதிபதி அக்குற்றவாளிகளுடன் போனார். அப்போது, ஷெ குரங்கு மற்றெல்லோரையும் விட்டுவிட்டு, கொலையாளிகள் இருவர்மேலும் பாய்ந்து விழுந்து அவர்களைக் கடிக்க ஆரம்பித்ததாம். இந்த சாட்சியத்தை நம்பி ஷெ குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. என்னே குரங்கின் புத்திக்கூர்மை!

அர்ச். ஆரோக்கியமாதாவின் திருவிழா, கல்கத்தா.— இந்நகரில தமிழர்க்குரிய அர்ச். சூசையப்பர் கோவிலில் திருக்குடும்ப சங்கத்தார் மேற்படி திருவிழாவை வெகு பூச்சியத்துடன் கொண்டாடினார்கள். செப்டம்பர்மீ 4உ கொடியேற்றமாகி, 12உ முடிவுபெற்றது. கோவில் வெகு நேர்த்தியாய் ஜோடிக்கப்பட்டு "மரியாயின் மாசில்லாத இருதயமே! இந்தியாவுக்காக வேண்

டிக்கொள்ளும்" என்னும் வார்த்தைகள் கோவில் முகப்பில் இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டிருந்தது. 12உ ஞாயிற்றுக் கிழமை காலே சங்கை. P. வில்லியம்ஸ் சுவாமியார் பாட்டுப்பூசை செய்தார். மாலே 5 மணிக்குச் சங்கத்தின் மெம்பருள் ஒருவரான் Mr. J. வில்லியம்ஸ் என்பவர் செய்த அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர், அர்ச். ஆரோக்கியமாதா ஆகிய இவர்களின் தேர்கள் பக்தர்கள் புடைசூழ விசேஷத் தெருக்களில் சுற்றுப்பிரகாரம் வந்தன. நமது பரமதாய்க்குப் புகழ்ச்சியாகச் செய்யப்பட்ட இத்திருவிழாவை நிறுத்த சிலர் பல இடறல்களைச் செய்தாலும் சங்கத்தின் காரியதரிசியாகிய Mr. G. லாசரஸ் அவர்கள் அதற்கெல்லாம் அஞ்சாமல், மற்ற வருஷங்களைவிட இவ்வருஷம் அதிக ஆடம்பரத்துடன் செய்தார். கத்தோலிக்கர்களான 600 தமிழரும் 400 பெங்காளிகளும் சுற்றுப்பிரகாரத்திற்கு வந்ததுடன், அநேக புறமதஸ்தர்களும் நமது அன்னையைப் பக்தியுடன் சங்கித்தார்கள். தென்னிந்தியாவைப்போல் இவ்வூரிலும் சுற்றுப்பிரகாரஞ்செய்ய வழிகாட்டிய திருக்குடும்ப சங்கத்தின் மெம்பர்களேயும், விசேஷமாய் இவ்வருஷத்திய கொண்டாட்டத்திற்காக வெகு சிரமம் எடுத்துக்கொண்ட Mr. M. N. சாமுவேல் சுப்பிரமணியப் பிள்ளையவர்களேயும் Mr. G. சூசை அவர்களேயும் பரிசுத்த ஆரோக்கியமாதா ஆசீர்வதிப்பாளாக.

அநியாயக் கோலே. — கோயமுத்தூர் வாசியும், நல்ல கத்தோலிக்குக் கிறீஸ்துவரும், புகைப்படம் பிடிப்பவருமாகிய குருசாமிப் பிள்ளை என்பவரை, சுப்பராவ் என்னும் பணக்கார அஞ்ஞான பிராமண வாலிபன் அநியாயமாய்க்கொலேசெய்ததற்காக அவன் மீதும் அவனுக்குத் துணைபோனவர்கள் மீதும் கொண்டுவரப்பட்ட கேசு கோயமுத்தூர் செஷன்ஸ்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. கொலேசெய்தவனுகிய ஷை சுப்பராவுக்கும், அவனுக்கு உதவி செய்த இரண்டு பேர்களுக்கும் தூக்குத்தண்டனையும், 4-வது குற்றவாளிக்கு தீவாந்தரசிட்சையும் விதிக்கப்பட்டது. இந்தக் கேசின் சுருக்கமான விவரம் பின்வருமாறு: -கொலேயுண்ட குருசாமிப் பிள்ளை குமாரத்தியாகிய சௌ. கிருபாம்பாளை, சுப்பராவ் மணஞ்செய்துகொள்ளக்கேட்க, அவர் அதை மறுத்ததனுல் சீற்றங்கொண்டு, குருசாமிப் பிள்ளையைக் கொன்றுவிட்டால், தான் எப்படியாவது, அவர் மகளேக் கைக்கொள்ளலாமென்ற எண்ணமுடையவனுய், தன் ஆட்களேவிட்டு, அயல் கிராமத்தில் புகைப்படம் பிடிக்கவேண்டுமென்று பொய்க்காரணஞ்சொல்லி, அவரை வண்டியிலேற்றிக்கொண்டு மனுஷசஞ்சாரமில்லாத காட்டிற் கொண்டுவரச்செய்து, அங்கு அவரைக் கொலேசெய்துவிட்டான். இந்தக் கொலே வெகு சாமர்த்தியத்துடன் சாட்சியம் ஏற்படாதபடி செய்யப்பட்டபோதிலும், கோயமுத்தூர் போலீசார் வெகுதிறமையுடன் அதற்காக உழைத்து துப்பு கண்டுபிடித்துக் குற்றவாளிகளேத் தண்டிக்கும்படியான ஹேது செய்தது பெரிதும் மெச்சத்தக்கது. செஷன்ஸ் நியாதிபதி விஷயா விஷயங்களே நன்காராய்ந்து, உண்மையைக் கண்டுபிடித்து குற்றவாளிகளுக்குத் தக்க தண்டனே விதித்தார். அவர் எழுதிய தீர்ப்பு சுமார் 70 பக்கங்களுக்கு அதிகமாயிருக்கிறது. குற்றவாளிகள் செஷன்ஸ் கோர்ட்டு தீர்மானத்தின்மேல், ஐகோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறார்கள். அங்கேயும் நியாயம் ஜெயமடையுமென நம்புகிறோம். பெண்ணாசையால் மதிமருண்டு செய்த இந்த அநியாய, அக்கிரம, அகோரக் கொலேக்கு ராஜதண்டனே இதுவானுலும், தெய்வதண்டனே வேறிருக்கிறது. அவனே என்று மவியாத் தீ நரகில் வீழ்த்துவதுடன், அவன் குடும்பங்களேயும் சந்ததிகளேயும் பல விதமாய்த் தண்டிக்குமென்பதில் சற்றேனும் சந்தேகமில்லே.

மனந்திரும்புதல்.—சென்ற செப்டெம்பர் மாதம் 8-ம் தேதியன்று வண்டலூருக்கு மேற்கே 7 மயிலுக்கு அப்பால் ஆரம்பாக்கம் என்னும் சிற்றூரில் 35 பஞ்சமர் குடும்பங்கள் ஞானதீக்ஷை பெற்றுச் சத்திய வேதத்தைத் தழுவிக்கொண்டார்கள். அவர்கள் மனந்திரும்பின வரலாறு பின்வருமாறு:—சென்ற வருடம் அக்டோபர் மாதத்தில் அவ்வூர் ஜனங்கள் தங்கள் தலேவர்களே மயிலே மிஷனேச்சார்ந்த ஒரு குருவானரிடம் அனுப்பி, ஆரம்பாக்கத்தாராகிய தங்களேக் கத்தோலிக்குக் கிறீஸ்து வேதத்தில் சேர்த்துக்கொள்ளவேணுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். குருசுவாமியார் உடனே அவர்கள் ஊருக்குச்சென்று, அச்சனங்களின் மனதை ஆராய்ந்து, அவர்களேத் திட

படுத்தி, அவர்களைத் திருச்சபையில் சேர்க்க முயற்சிகள் செய்தார். ஒரு சிறு கூரைப் பள்ளிக்கூடம் கட்டப்பட்டதுமன்றி, ஜனங்கள் மந்திரம் ஞான உபதேசம் கற்றுக் கொள்ள ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. வேத காரியங்களைப் படிக்க அச்சனங்கள் காட்டிய அவாவும் ஊக்கமும் அதிசயிக்கத் தக்கது. குறித்த வேளைகளில்மாத்திரமல்ல, அவர்கள் வீட்டில் வேலை செய்யும் நேரங்களிலும், வயல் வெளிகளிலும் மந்திரங்களை உரத்த சத்தமாய்ச்சொல்லி கற்றுக்கொள்வதைப் பார்ப்பது விநோத காட்சியாயிருந்தது. ஒரு வருஷம் பூர்த்தியாகவில்லை. இதற்குள் சிறுவரும் சிறுமிகளும், வாலிபரும், வயோதிகரும் மந்திரங்களை மனப்பாடமாய்ப் படித்து விட்டார்கள். ஆகவே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க சென்ற செப்டெம்பர் மாதம் 8-ம் தேதியாகிய தேவமாதா பிறந்த திருநாளை குருவானவர் குறித்தார். அந்நாள் ஆரம்பாக்கத்தில் அற்புதமான அழகிய மகோற்சவ நாளாய் ஜொலித்தது! வந்திக்கத்தக்க மயிலை மேற்றிராணியாண்டவர் அன்று காலை ஓர் மோட்டார் வண்டியில் இவ்வூரில் வந்திறங்கினர். ஐந்து குருப்பிரசாதிகளால் தயார் செய்யப்பட்டிருந்த 160 பேர்களுக்கும் மெத்த ஆடம்பரச் சிறப்புடன் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இச்சடங்கைக்காணச் சுற்று கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்காக கிறீஸ்துவர்களும் அஞ்ஞானிகளும் குழுமியிருந்தனர். அன்று இரவு புதிதாய் ஞானஸ்நானம்பெற்ற இச்சனங்கள் ஒரு சிறுதேரைச் சிங்காரித்து தேவ மாதாவின் சுரூபத்தை அதில்வைத்து மேளதாளத்தோடும், நாத கீதங்களோடும் செபமாலை செபித்துக்கொண்டு மெத்த பக்தியாயும், விமரிசையாயும் ஊர்வலம் வந்தார்கள். தங்களையும், தங்கள் ஊரையும் தேவதாய்க்கு ஒப்படைந்து, அவளைத் தங்கள் ஊருக்கு மாதாவாகவும் இராக்கினியாகவுமிருக்க மன்றாடினார்கள். அவர்கள் தேவதாயைத் தங்களூருக்கு இராக்கினியாகத் தெரிந்துகொண்டதினால், ஆரம்பாக்கம் என்னப்பட்ட தங்களூரை **மரியம்பாக்கம்** என்றுமாற்றி அழைக்கிறார்கள். இந்த ஏழைகளாகிய கபடற்ற நல்ல ஜனங்களைத் தமது திவ்ய குமாரனுடைய மந்தையில் சேர்த்த தேவதாய் விசுவாசத்தில் அவர்களை ஸ்திரப்படுத்தி, உத்தம கிறீஸ்துவர்களாக்கி, இன்னும் அஞ்ஞான இருளடைந்த அடுத்த கிராமங்களிலும் தமது கிருபையும் வல்லபமுமுள்ள மன்றாட்டினால் மெய்ஞ்ஞான சூரியன் உதித்துப் பிரகாசிக்கும்படி கடாட்சிப்பாளாக.

மன்றாட்டு கேட்கப்பட்டது.—இங்கிலாந்திலுள்ள ஒரு சேசு சபை மடத்தில் ஒரு வித்தியார்த்தி குருப்பட்டத்துக்காகப் படித்துக்கொண்டிருந்தார். குருப்பட்டம்பெறு முன்னேயே, இளம் வயதில் இவர் அமெரிக்கா தேசத்திலுள்ள வேறொரு மடத்துக்கு மாற்றப்பட்டார். மாற்றப்பட்டு தந்தேசத்தைவிட்டுப் புறப்படுமுன்னே, தாய்க்கு ஏக புத்திரனை இவர் தந் தாயைச் சந்தித்துவிட்டு, "இனி நம் தாயாரைச் சந்திக்கமுடியுமோ என்னவோவென்று எண்ணினர். ஆயினும், நம் தாயார் இறப்பதற்குமுன், நாம் குருப்பட்டம் பெற்று, நம் கையால் அவளுக்கு திவ்யநன்மை கொடுக்கும் பாக்கியம் சர்வேசுவரன் நமக்கு அளிக்கவேண்டு" மென்று மனதில் அவரை வேண்டிக்கொண்டு, தாயாரிடம் விடைபெற்று அமெரிக்காவுக்குப் பிரயாணமாயினர். அங்கு போய்ச்சேர்ந்தபின், தம்முடைய படிப்புகளையெல்லாம் படிப்படியாய்ப் படித்து சில்லறைப் பட்டங்களையெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பெற்றபின், தமது 30 வயதில் குருப்பட்டம் பெற்றார். தாம் முதல் பூசைசெய்கையில் தமது மாதாவை நினைத்து, தம் கையால் அவருக்குச் சற்பிரசாதம் அளிக்க வேண்டுமென்ற தமது நெடுநாள் கோரிக்கையை அப்போதும் புதுப்பித்தார். தாயுக்கும் பிள்ளைக்கும் அடிக்கடி கடிதப் போக்குவரவு இருந்தபோதிலும், ஒருவரை யொருவர் சந்திப்போம் என்ற நம்பிக்கைக்கு இடமில்லாதிருந்தது. தாயார் மரித்தார் என்ற செய்தி எந்த நிமிஷத்திலும் வரலாமென்று எண்ணும்படியாயுமிருந்தது. ஆயினும் இக் குருவானவர் தம் தாயாருக்கு தம் கரத்தால் திவ்யநற்கருணை கொடுக்கச் சர்வேசுரன் தயை செய்யவேண்டுமென்று அநுதினமும் தமது பூசையில் அவரை ஆவலோடு மன்றாடிவருவார். இவ்வாறு பல வருடங்கள் கடந்தன. திடீரென ஐரோப்பியயுத்தம் ஆரம்பித்தது. அமெரிக்காவும் அதில் கலக்கும்படியாயிற்று. அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்ட சேனைகளோடு நமது குருவானவரும் அனுப்பப்பட்டார். ஆனல் சேனை நேராக பிரான்சுக்குப் போகக்

கட்டளையிடப்பட்டதனுல், தம் தாயாரிருந்த இங்கிலாந்துக்குப்போகச் சந்தர்ப்பப்படவில்லை. பிரான்சு யுத்தகளத்தில் வேலைசெய்து யுத்த முடிந்தபின் அமெரிக்காவுக்குத் திரும்பிப்போக உத்தரவாயிற்று. அப்போதும் அவர் தம் தாயாரைச் சந்திக்க இங்கிலாந்துக்குப்போக உத்தரவில்லாமற் போய்விட்டது. இது அவருக்கு மெத்த மனவருத்தத்தை யுண்டுபண்ணிற்று. என்றாலும் சர்வேசுரனை நம்பி தமது மன்றாட்டை விடாமல் செய்துகொண்டுவந்தார். அமெரிக்காவுக்குக் கப்பலேறவிருந்த அன்றைக்குக் கப்பல் யந்திரத்திலேற்பட்ட இடையூறினுல் அதைச் செப்பனிட நாலு நாள் செல்லுமென்றும், இந்த நாலு நாளில் விருப்பமுள்ளவர்கள் ரஜாபெற்று இங்கிலாந்து முதலிய இடங்களுக்குச்சென்று திரும்பலாமென்றும் உத்தரவானதால் நமது குருவானவர் பரமானந்தங்கொண்டு, இங்கிலாந்திற்குச்சென்று, தம் தாயாரைக்கண்டு, அவள் அச்சமயம் மரணப்படுக்கையிலிருப்பதைவிண்டு, அவ்விடத்துப் பங்கு சுவாமியாரின் உத்தரவுபெறறு, சற்பிரசாதங்கொண்டு, தமதன்னைக்குக் கொடுத்து, அவள் மரிக்குந்தனையு மருகிருந்து அடக்கஞ் செய்துவிட்டு, மனச்சமாதானத்துடன் தம் சேனையோடு கப்பலேறி அமெரிக்கா தேசஞ் சென்றார். இவ்வாறு நம்பிக்கையுடன் விடா முயற்சியாய் செய்த மன்றாட்டு கேட்கப்பட்டதை நமது நண்பர்கள் அறியக்கடவார்கள்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக் கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்பசுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

ப—ர்.

நன்மரண அறிக்கை.

தங்கவயல்.

பெங்களூர் அலசூர் எல்லம்மன் வீதியில் வசித்து காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ P. மஸ்தான் மரியசூசை அவர்களின் மனைவியும், எனது அருமை தாயாருமாகிய மனோன்மணியம்மாளென்னும் சவரியம்மாள் தனது 65-ம் பிராயத்தில் கடைசித் தேவத்திரவிய அநுமானங்களையும் பெற்று 1920ஆம் செப்டெம்பர்மீ 3உ வெள்ளிக்கிழமை இரவு $9\frac{1}{2}$ மணிக்கு நித்திய பிதாவினிடம் தம் ஆத்துமத்தைக் கொடுத்து பரலோகபிராப்தியடைந்தார்கள். இதைக் கண்ணுறும் சகோதரர்களே! மரித்த இந்த அம்மாளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பா., பிரி., திரி. ஜெபிப்பீர்களாக. *R. I. P.*

தாயை இழந்து பரிதபிக்கும்
P. M. ANTHOO,
Nundydroog Mine,
K. G. F.

சி. நம்பியந்தல் அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

அடியில் கையொப்பமிட்ட நாம் அதிசயத்துக்குரிய புதுமைகளைச் செய்யும் அர்ச். அந்தோனியார் பெயரால் 1920ஆம் வட ஆர்காடு ஜில்லா திருவண்ணமலை தாலுக்கா சி. நம்பியந்தல் கிராமத்தில் பெரியதோர் தேவாலயம் கட்டத் துவக்கிவிட்டோம். உண்மையில் கையில் காசில்லாவிட்டாலும் நம்முடைய நாட்டார் அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களென்று எமக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமானதினுலும், அவருடைய பெயரால் துவக்கும் எவ்வலுவலும் தவறாமல் அனுகூலமாகுமென்பதும் எமக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமானதினுலும் அவருடைய பக்தர்களையே நம்பி தைரியத்துடனும் துணிகரத்துடனும் 20,000 ரூ. மதிப்புள்ள இப்பெரும் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கிவிட்டோம். சர்வேசுரனுடைய மகிமை விளங்கவும் அர்ச். அந்தோனியார் புதுமைகள் துலங்கவும் நேயர்கள் எமக்குதவி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோமே. அர்ச். அந்தோனியார் பக்தர்கள் கொடுத்துதவும் தர்மம் எவ்வளவு சொற்பமாயினும் அதிக சந்தோஷத்துடனும் நன்றியறிதலுடனும் பெற்றுக்கொள்ளப்படும்.

எற்கெனவே வசூலான தொகை	ரூ.	120	0	0
Mr. Saverirayelu	,,	20	0	0
ஆ மொத்தம் ...		140	0	0

REV. JOS. GNANADICAM, சி. நம்பியந்தல், காஞ்சி P. O., போளூர்.

THE RELIABLE
FAMILY MEDICINES SUPPLY AGENCY
2/74, Broadway, Madras.

நம்பிக்கைக்குரிய குடும்ப ஔஷத சப்ளை ஏஜென்ஸி
2/74, பிராட்வே, மதராஸ்.

குடும்ப உபயோகத்துக்கு அடிக்கடி வேண்டுவனவாகிய சில்லறை மருந்துகள் உண்மையானவைகளாயும், யாவரும் நம்பிக்கையுடன் உபயோகித்துச் சுகமடையக்கூடியனவாயுமிருக்கவேண்டுமெனக் கருதி ஷ்டி ஏஜென்ஸியாரால் பின்வரும் மருந்துகள், சிறந்த பண்டிதர்களின் அரிய முறைகளைக்கொண்டு, உயர்ந்த சரக்குகள், மூலிகைகளைச் சேர்த்து, சாஸ்திர முறைப்படி முடித்தெடுக்கப்பட்டிருக்கின்றன. உண்மையான நல்ல மருந்துகள் வேண்டுபவர்கள் இம்மருந்துகளை ஒரு முறையேனும் வாங்கிப் பரீட்சித்துப் பார்ப்பார்களாக!

	மருந்து	ரூ.	அ.
1.	ஆஞ்ஜெல்லா கஸ்தூரி மாத்திரை. 100 கொண்ட சீசா.	0	12
2.	ஆஞ்ஜெல்லா தீபாக்கினி மாத்திரை. 100 கொண்டது ...	0	8
3.	ஆஞ்ஜெல்லா தாம்பூல மாத்திரை. 100 கொண்டது ...	0	5
4,	ஆஞ்ஜெல்லா பற்பொடி, நெ. 1. (30 நாளைக்கான தூள் கொண்ட) டப்பி	0	4
5.	ஆஞ்ஜெல்லா பற்பொடி, நெ. 2. (பல்வலி முதலியதுக்கு)	0	4
6.	சுத்தமான அசல் நீலகிரி யூக்கலிப்டஸ் ஆயில் (முதல்தரமானது) அவுன்ஸ் சீசா ...	0	5
7.	ஆஞ்ஜெல்லா ரத்தபுஷ்டி ரசாயனம் (24 வேளை மருந்துள்ள) புட்டி	1	8
8.	ஹாஸ் விக்கோமா பாம் (தலைவலி முதலியதுக்கு) டப்பி	0	10
9.	ஹாஸ் விக்கோமா பல்வலித் தைலம் (ஆச்சரியமான மருந்து) சீசா	0	8
10.	ஹாஸ் விக்கோமா சருமக் களிம்பு (சிரங்கு முதலியவைகளுக்கு) டப்பி	0	8
11.	ஆஞ்ஜெல்லா சந்தனாதிச் சூரணம் (ஸ்நான காலத்தில் உடம்பில் பூசிக்கொள்வது) டப்பி	0	6
12.	ஆஞ்ஜெல்லா சுகபேதி மாத்திரை (50 கொண்டது) சீசா	0	8
13.	ஆஞ்ஜெல்லா கூந்தல் வளர் தைலம் (4 அவுன்ஸ் கொண்ட சீசா)	1	0
14.	ஆஞ்ஜெல்லா ஸ்நான தைலம் (6 அவுன்ஸ்கொண்ட சீசா)	1	4
15.	ஆஞ்ஜெல்லா பரிமளக் கூந்தல் தூபம் (நறுமணமுள்ளது) டப்பி	0	4

தபாற் செலவு பிரத்தியேகம்

மேற்படி மருந்துகளின் முழு விவரங்களையும் அறிய விரும்புவோர்கள் மேற்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொண்டால் முழு விவரக் கேட்லாக் ஒன்று அனுப்பப்படும்.

மேற்படி மருந்துகள் வி. பி. தபால் மூலமாகவும் அனுப்பப்படும். இரண்டு மூன்று மருந்துகளைச் சேர்த்து வாங்குபவர்களுக்கு தபாற் செலவு கூடிவரும்.

நெட்டால், சிங்கப்பூர், பஸாரா, மெசபொட்டேமியா முதலிய நாடுகளுக்கு வி. பி. தபால் முறையில்லை. ஆகையால், அங்குள்ள நண்பர்கள் முன்பணம் அனுப்பியே மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நம்பிக்கையாய் பணம் அனுப்பலாம். மோசமிராது. வெளியூர் ஆர்டர்களுக்கு விசேஷ கவனஞ் செலுத்தப்படும்.

புரொப்ரைட்டர். *The Proprietor.*